# யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஓர் 'அம்புலன்ஸ்'

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 365
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 18 றமழான் 1 திங்கட்கிழமை (4-12-67)

## வண்டியும்பழுது

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான 'அம்புலன்ஸ்' வண்டி கடந்த இரு வாரகாலமாகப் பழுதடைந்திருப்பதால் நோயாளருக்குப்பெரும்கஷ்டமேற்பட்டுள்ளது.

இங்கு பாவிக்கப்பட்டு வந்த மூன்று வாகனங்களில் ஒன்று மாத்திரம்நோயாளர்களை ஏற்றி இறக்கி வந்தது. மற்றொன்று கடந்த இரு மாத காலமாகவே பழுதடைந்த நிலையில் திருத்தப் படாமல் இருக்கின்றதாம் இரத்த வங்கிக்குச் சொந்தமான சிறிய வாகனம் மாத்திரம்தற்போது இயங்கி வருகின்றது.

நோயாளர்களை ஏற்றி இறக்கும் ஒரே ''அம்புலன்ஸ்' வண்டி பழுதடைந்தும் இன்னும் இதனைத் திருத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால் பல வேலைகள் இங்கு ஸ்தம்பிதமடைந்துள்ளதாகத் தெரிகின்றது. (ந. நி)

# யாழ்ப்பாணத்தில் சம்பா அரிசி
# கொத்து ரூ. 1-60
## ஆனல் ஒரே இடத்தில் மட்டும் தான்

யாழ்ப்பாணம், திங்கள்

ரூபாய் மதிப்புக் குறைக்கப் பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும் இங்கு சம்பா அரிசி ஒரு கொத்து 1-60 சதத்திற்கு விக்கப்படுகிறது. யாழ்ப்பாண மார்க்கட்டுக்குள் உள்ள சில கடைகளில் ஒரு கொத்து அரிசி 1-80 சதத்திலிருந்து 2-00 ரூபா வரை நேற்று விக்கப்பட்ட போதிலும் ஆஸ்பத்திரிச் சந்தியிலுள்ள ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் நேற்று ஒரு கொத்து சம்பா அரிசி 1-60 சதத்துக்கு விற்கப்பட்டது.

## பொலிஸ் அதிபரும் யாழ்ப்பாணம் வருகிருர்
### பிரதமர் விஜயத்துக்கு பலத்தபாதுகாப்பு

யாழ்ப்பாணம், திங்கள் நாளை இங்கு விஜயம் செய்யும் பிரதமர் டட்லி சேனநாயக்காவுடன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக்அபயகுணவர்த்தன வருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு பிரதமருக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு அளிக்கும் முகமாக திரு. அலரிக் அபயகுணவர்த்தனபிரதமர் வரும் விசேஷ விமானத்திலேயே இங்கு வருகின்றுர்.

பிரதமருடன் உணவு விவசாய அமைச்சர் திரு எம். டி. பண்டாவும் இங்கு வருகிறுர். ஏற்கனவே உள்ளூராட்சிஅமைச்சரும், போக்குவரத்து அமைச்சரும். உதவி உள்ளூராட்சி அமைச்சரும் பிரதமருடன் இங்கு வருவார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அன்று காலை 8 மணிக்கு இங்கு வந்து 11 மணிக்குத் திரும்பும் பிரதமருக்கு யாழ்ப்பாணம்''கிங்ஸ் ஹவுஸில்'' ஒரு தேநீர் விருந்துமளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வடபகுதி பொலிஸ் சுப்பிரின்ட்டன்திரு. ஆர். சுந்தரலிங்கம்தலைமையில்உதவி பொலிஸ் சுப்பிரின்டன்களான ஆர். சி. தவராசா, வீரசிங்க, லியனகே, அபயவர்த்தன ஆகியோர்களின் கண்காணிப்பின்கீழ்பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள். சார்ஜன்ட்டுகள், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உட்பட 1113 பொலிஸ் ஊழியர்கள்இங்கு

(5-ம் பக்கம் பார்க்க)

1. யானை மார்க் நம்பர் 1 சிமென்ஸ
ஒடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.
மறவாதீர்—சிமென்ஸ்.
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-25
2 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-25

2. சிமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காயெண்ணெயும் ஆமணக்கெண்ணெ கூந்தல் வளரும் தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-10
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00

3. சிமென்ஸ் புத்தராஜா தைலம்
தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநீசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஒளஷதம்.
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-35
6 அவுன்ஸ் போத்தல் ரூ 3-25
இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சிமென்ஸ் பற்பொடி: தினமும் சிமென்ஸ் பற்பொடியால் உங்கள் பற்களை துலக்குங்கள். பல் சூத்தை முதலிய எல்லா பல், வாய் நோய்களையும் குணப்படுத்தும் ஓர் ஆயுர்வேத தயாரிப்பு. நல்ல பற்களில் சூத்தை தொற்றுதபடி அவற்றை பாதுகாத்து இறுகப்பண்ணும். பற்களை வெண்மையாக்கும். நச்சுக் கலப்பில்லாதது.
ஒரு பாக்கெட் 60 சதம்,

வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல் நன்று
இதுதான் நிவாரணம்:
சிமென்ஸ் கடுக்காய் குளிகைகள்
இவற்றில் ஒரு பாக்கெட்டை வைத்துக்கொண்டு வயிற்றுக்குழப்பம், தலைவலி வரும்போது உபயோகிக்கவும். ஒரு பாக்கட் ரூ. 1/20, தபால் செலவு 60 சதம்.

சிமென் பிரதர்ஸ்,
234, 5-ம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு—11

யாழ்ப்பாணம் சி. டபிள்யூ. ஈ, ஸ்தாபனத்தில் செத்தல் மிளகாய் ருத்தல் 3-00 ரூபாவாக விற்கப்படுகின்ற போதிலும் மற்றைய கடைகளில் ருத்தல் 3-50 சதத்திலிருந்து 4 ரூபாவரை விற்கப்படுகின்றது. ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் செத்தல் மிளகாய், மல்லி, துவரம் பருப்பு, மைசூர் பருப்பு ஆகியன விற்பனைக்கு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சி. டபிள்யூ. ஈ. ஸ்தாபனத்தில் பொருட்கள் விற்பனை செய்யும் விலைவிபரம் பின் வருமாறு: உருளைக்கிழங்கு ருத்தல் 70 சதம், உள்ளி ருத்தல் 1 ரூபா 08 சதம், மிளகாய் ருத்தல் 3 ரூபாய், பெருஞ்சீரகம் ருத்தல் 55 சதம், கடுகு ருத்தல் 69 சதம், மிளகு ருத்தல் 1-40 தெந்தயம் ருத்தல் 55 சதம் சதம், மஞ்சள் ருத்தல் 41 சதம், உழுத்தம் பருப்பு ருத்தல் 52சதம். சவ்வரிசி ருத்தல் 46சதம், உப்பு ருத்தல்6சதம், அறுக்குளாக் கருவாடு ருத்தல் 1-45சதம். மீன்டின்கள், பாலுணவுப் பொருட்கள் போன்றவற்றில் விலை மாற்றம் ஏற்படவில்லை யெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச்சங்கத்தில்பொருட்கள் விற்பனை செய்யப்படும் விலைவிபரம் வருமாறு: பம்பாய் வெங்காயம் ருத்தல் 29 சதம், ஈரவெங்காயம் ருத்தல்31சதம், மஞ்

([illegible]-ம் பக்கம் பார்க்க]

## தொலைபேசிச் சேவை திடீர்துண்டிப்பு
### நாசவேலை காரணமா?

யாழ்ப்பாணம், திங்கள் நேற்று முன் தினம் நள்ளிரவிலிருந்து யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் தொலைபேசிச் சேவை திடீரெனத் துண்டிக்கப்பட்டுள்ளது. கடந்த பல தினங்களாக யாழ்ப்பாணத்தில் காலநிலை சீராக இல்லாத போதும் வவனியாவரை இயங்கிய தொலைபேசிச் சேவை நேற்றிரவு முதல் துண்டிக்கப்பட்டிருப்பது பற்றி தபால் இலாகாபூரண விசாரணையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தந்திப்பகுதி ஊழியர்களின் விஷமச்செயலாக இது இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது. நேற்று முன்தினமிரவு கிளிநொச்சிப்பகுதியில் தந்திக் கம்பிகள் களவாடப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்

[8-ம் பக்கம் பார்க்க)

## சேர். பொன் இராமநாதன் ஞாபகார்த்த விழா

நிகழும் பிலவங்க ஹூ கார்த்திகை மீ (6-12-67) புதன்கிழமை சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் ஞாபகார்த்தவிழா இராமநாதன் கல்லூரியில் கொண்டாடப்படும். மாலை 5-30மணிக்கு திரு. தி. முருகேசபிள்ளை [உதவி அரசாங்க அதிபர் வ.ப.] அவர்கள் தலைமையில் நடைபெறும். பகிரங்கக் கூட்டத்தில் சொற்பொழிவுகளும் ''இராமநாத வள்ளல்'' என்ற தலைப்பில் இணுவை த. சிதம்பரநாதன் அவர்கள் அளிக்கும் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும் இடம் பெறும்.

அதிபர்
இராமநாதன்கல்லூரி

350

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அண்ணுமலை சிவன்கோவில் பூசகர்.

பொன்னுவெளி,
பூநகரி.

இவ்வளவுகாலமும் செய்த மருந்தால் சித்திஅடையவில்லை. ஆனுல்சிவன்கோவில் பூசகராய் உள்ள இளைய தம்பி நாகலிங்கத்துடைய மருந்திஞல் மிகவும் நன்மை அடைந்துள்ளேன். இவர் யோகசுவாமியின் இடத்தை அடைந்துள்ளார். இதைப் பற்றி மற்றவர்களுக்கு விளம்பரம் தருகிறேன்.

இப்படிக்கு
இ. இரெங்கநாதன்.

352

## கேள்வி விளம்பரம்

### உரும்பராய் பட்டின சபை

உரும்பராய் திரு வீதி அமைப்பதற்கு எமால் கேள்விப் பத்திரங்கள் 15-12-67-ம் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப் படும்.

ரூபாய் 5000/-க்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தக் காரர்களுக்கு 13-12-67-ம் திகதி பி. ப. 3-00 மணி வரை ரெண்டர் பத்திரப் பணம் ரூபா 10/-தும், ரெண்டர் பணம் ரூபா 50/-தும் கட்டியதன் பேரில் ரெண்டர் பத்திரம் வழங்கப் படும். பத்திரப் பணம் ரூபா 10/- திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.

க. பத்மராசா,
தலைவர்.
பட்டின சபை,
உரும்பராய்.

பட்டின சபைக்
காரியாலயம்,
உரும்பராய்.
30-11-67. 353

## பண்டத்தரிப்பில் அரிசி

பண்டத்தரிப்பு, ஞாயிறு இப்பகுதியில் அரிசி விலை 1-90ஆக உயர்ந்துள்ளது. மேலும்விலை அதிகரிக்குமோ என மக்கள் அஞ்சுகின்றனர்.

# மாவட்டசபை மசோதா மந்திரிகள் இன்று ஆராய்வர்

கொழும்பு, ஞாயிறு மந்திரிசபை நாளை கூடும் போது மாவட்ட சபை மசோதா பற்றி ஆராயும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்டசபை நகல் மசோதா தயாராகிவிட்டது. இதன் பிரதிகள் கடந்த வாரம் பிரதமர் டட்லியிடம கையளிக்கப் பட்டுள்ளது.

மந்திரிசபையில் தமிழரசுக்கட்சியின் ஏக பிரதிநிதியாக இருக்கும் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்திஞல் இம் மசோதா தயாரிக்கப்பட்டது.

தேசிய அரசாங்கத்தின் இதர மந்திரிகளிடமும், மாவட்ட சபை நகல் மசோதாவின் பிரதிகள் கொடுக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

1965-ம் ஆண்டு தேசிய அரசாங்கம் நிறுவப்பட்ட நாள் முதல் மாவட்டசபை மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தமிழரசுக்கட்சி தொடர்ந்து முயற்சி எடுத்து வந்துள்ளது. தமிழரசுக்கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் 68-ம் ஆண்டு ஜனவரி மாதம் முடிவிற்குள் மாவட்டசபைமசோதாவை பாராளுமன்றத்தில் கொண்டுவராவிட்டால் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டது.

மாவட்டசபை மசோதா இறுதி வடிவம் பெறும் வரை மந்திரி சபை பல தடவை கூடி இவ்விஷயமாக ஆராயும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் இம்மசோதா சமர்ப்பிக்கப்படுமுன்னர் ஆளும் கட்சிகுழுக் கூட்டத்திலும் இம்மசோதா பற்றி ஆராய சந்தர்ப்பமளிக்கப் படுமென்றும் தெரியவருகிறது.

# வசதியற்ற தொழிலாளருக்கு உதவியாக இருக்கும்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணத்தில் தொழில் நீதிமன்ற விசாரணை நடாத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென யாழ்ப்பாண எம்.பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கேட்டுக் கொண்டதை தொடர்ந்து. தொழில் மந்திரி, தொழில் நீதிமன்ற தலைவர் மூலம், யாழ்ப்பாணத்தில், மாதம் ஒரு முறை விசாரணை நடத்த ஒழுங்கு செய்துள்ளார். யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக விசாரணை நேற்று ஆரம்பமாகியது.

தொழில் தகராறு சம்பந்தமாக, தொழில் நீதிமன்ற விசாரணைக்கு, கொழும்பு செல்லவேண்டிய நிலையிலிருந்தமுதலாளிகளும், தொழிலாளிகளும் யாழ்ப்பாண உதவி தொழில் கமிஷனர் திரு. ஜி. டி. ராசாமூலம், யாழ்ப்பாண எம். பி. யிடம் யாழ்ப்பாணத்தில் விசாரணை செய்ய ஒழுங்கு செய்து தருமாறு கோரியதை தொடர்ந்து அவர் தொழில் மந்திரியுடன் தொடர்பு கொண்டார்.

தொழில் நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் விசாரணைநடத்துவது சேவையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்படும் வசதியற்ற தொழிலாளர் பலருக்கும், உதவியாகஅமையுமென எதிர்பார்க்கப் படுகிறது.

தொழில் தகராறுசம்பந்தமான புகார்கள். ',காரியதரிசி, ரேஸ்மீட்பிளேஸ், கொழும்பு'' என்ற விலாசத்திற்கு வேலை நீக்கம் செய்யப்பட்ட 3மாத காலத்திற்கிடையில், விண்ணப்பிக்கப் படவேண்டும்.

---

## மழைக்கு முகாம்

யாழ்ப்பாணம்; ஞாயிறு யாழ்ப்பாணத்தில் வேலை நிறுத்தம் செய்து வரும் தந்தி தொலைபேசி போக்குவரத்து ஊழியர்கள் பெரிய தபாற் கந்தோருக்கு முன்ஞல் கன்வெஸ்கூடாரம் அமைத்துஅதில் தங்கியுள்ளார்கள். இங்கு பெய்து வரும் மழைகாரணமாகவே இவ்வித ஏற்பாடு செய்துள்ளார்களெனத் தெரிகிறது.


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
அன்பே வா

REGAL JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 P.M.
TonyKendall&Anne Smyrner
in
Three Yellow Cats
(English)
[Death, is Nimble-Death is Quick]

மனேகரா
யாழ்ப்பாணம்
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Ronald Fraser,
Barbara Windsor
in
Crooks in Cloister


உணவுகட்டுப்பாட்டை மீறிய

# ஐந்து கடைக்காரர் மீது வழக்குதாக்கல் செய்யமுடிவு

யாழ்ப்பாணம், திங்கள் வடபகுதியில் உணவுக் கட்டுப்பாட்டைமீறும் வியாபாரிகளைப்பிடிக்கும் வேட்டையில் துரிதமாக ஈடுபட்ட யாழ்ப்பாண உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் 5 வியாபாரிகள்மீது வழக்குத்தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளனர்.

உணவுக் கட்டுப்பாட்டு விலையை மீறிஞர்களென உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் கையில் சிக்கியிருக்கும் இவ்வியாபாரிகளில் அதிகமானவர்கள் பாணின் கட்டுப்பாட்டு விலையை மீறி அதிகமான விலைக்கு விற்றுள்ளார்களெனத் தெரிகிறது.

இருபாலையைச் சேர்ந்த ஒரு கடைக்காரர் 24 சதம் விற்கவேண்டிய 12 அவுன்ஸ் பாணை 32 சதமாக விற்றுள்ளார்.

புத்தூரில்ஒருகடைக்காரர் 22 சதம் விற்கவேண்டிய 11 அவுன்ஸ் பாணை 32 சதத்திற்கு விற்றுள்ளார்.

தொண்டமனுற்றில் ஒரு கடைக்காரர் ஒரு ரூபா விற்கவேண்டிய கட்டிப்பால் ரின்னை ஒரு ரூபா ஐம்பது சதத்திற்கு விற்றுள்ளார்.

வல்வெட்டித்துறையில் ஒரு கடைக்காரர் 28 சதம் விற்கவேண்டிய 14 அவுன்ஸ் பாணை 32 சதமாக விற்றுள்ளார்.

நெல்லியடியில்ஒரு கடைக்காரர் மைசூர் பருப்பை வைத்துக்கொண்டு விற்க மறுத்துள்ளார். இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

(வி. நி.)

## இன்சூரன்ஸ் விசாரணை முடிந்தது

யாழ்ப்பாணம், திங். காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர் நடத்திய வேலை நிறுத்தம்பற்றி முன்னுள் பிரதம நீதியரசர் திரு. எம். சி. சன்சோனி தலைமையில் நலடபெற்று வந்த விசாரணை முடிவுற்றுள்ளது.

இவ்வருடம் மார்ச் மாதத்தில் இந்த ஊழியர் வேலை நிறுத்தம் செய்தனர். 83 நாட்கள்வரை இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றது தெரிந்ததே.

தொழிலமைச்சரால் நியமிக்கப்பட்ட இந்த விசாரணைக் கமிஷன் தனது அறிக்கையை கவர்னர் ஜெனரலிடம் விரைவில் சமர்ப்பிக்கவிருக்கிறது.

காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியரின் சம்பள உயர்வு, பதவி உயர்வு, போனஸ் சம்பந்தமாகஇந்த விசாரணை நடைபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

[நி]

## காணவில்லை

மோதிரமும், பணமும், ரசீதுகளும் தவறிவிட்டன. எடுத்தவர்கள் பின்வரும் விலாசங்கள் ஒன்றில் சேர்ப்பித்தால், தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி. பூபாலச்சந்திரன், சந்தை வீதி, உடுப்பிட்டி, பாரத் ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.

2160


திருவெம்பாவை பூஜைக்கு

தேவையான

* விளவுகூடம்
* அபிஷேக திரவியங்கள்
* அபிஷேகச் சந்தனம் [உடன் யந்திரத்திஞல் அரைக்கப்பட்டது]
* அபிஷேகக் குங்குமம்
* அபிஷேக விபூதி
* அபிஷேக வாசனுதிகள்
* கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
* நைவேத்தியப் பொருட்கள்

மற்றும்
சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 35 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனுதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 5 4 1 Residence: 7 0 6 8

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
2-30, 6-30, & 9-30 p. m.
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] விஜிதா [ஹட்டன்]
மொடேர்ன் [பண்டாரவளை]

திரை உலகிலே என்றும் கண்டிராத புதுமைக்கதை! உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்! இனிமைக் கருத்து. கடைசிவரை பார்ப்போரின் மனதில் ஐயத்தை தோற்றுவிக்கும் கதையமைப்பு! சந்திரபாபு புதுமையான பாத்திரமேற்று நடித்து டைரக்ட் செய்த உன்னத சித்திரம்.!



சந்திரபாபு—கே. ஆர். விஜயா
சாவித்திரி - மனேகர் - விஜயஸ்ரீ
ராஜன்- ''சோ'' நம்பிராஜன்
ஸ்டண்ட் சோமு-எம். ஆர். ஆர். வாசு
ஆகியோர் நடித்த விஸ்வபாரதியின்

தட்டுங்கள் திறக்கப்படும்

திரைக்கதை, டைரக்ஷன்: ஜே. பி. சந்திரபாபு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரணுசி மாணவர் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டனர்

## ஆங்கில நீடிப்பை எதிர்த்து அமைதியாகப் போராடுவராம்

வாரணுசி, டிசெ. 3

ஆங்கிலத்தை நீடிப்பதை எதிர்த்து 5 நாட்களாக நடத்திவந்த தமது வேலை நிறுத்தத்தையும், ஆர்ப்பாட்டங்களையும் வரணுசி மாணவர்கள் கைவிட்டுள்ளனர்.

கல்லூரி அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வாறு செய்துள்ள மாணவர்கள், மேற்கொண்டு தமது போராட்டத்தை அமைதியான முறையில் நடத்துவதாக உறுதி அளித்துள்ளனர்.

கல்லூரி வாயில்களில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் காவல் நேற்று வாபஸ்பெறப்பட்டது.

அத்துடன், சில பகுதிகளில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டமும் நீக்கப்பட்டது.

கடந்த 29-ந் திகதியன்று மாணவர்கள்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையிட்டு விசாரணை நடத்துமாறு வரணுசி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார்.

## பேச்சு ரத்து

நியூயோர்க், டிசெ.3

ஐ.நா.பொதுக் காரியதரிசி யூதாண்டுடன் நேற்றுத் தாம் நடத்தவிருந்த பேச்சு வார்த்தைகளை அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு.டீன் ரஸ்க் ரத்துச்செய்து விட்டார். இதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

இப்பேச்சுவார்த்தைகளின் போதுஅவர் யூதாண்டுடன் சைப்பிரஸ், வியட்னும் பிரச்னைகள் பற்றி விவாதிக்கவிருந்தார்.

## இந்தியாவில் லாவோஸ் மன்னர்

புதுடில்லி, டிசெ. 3

லாவோஸ் மன்னர் சவாங் வத்தாணு இந்தியாவுக்கு 12 நாள் உத்தியோகபூர்வமான விஜயத்தில் இன்று இங்கு வந்துசேர்ந்தார்.

அவரது விஜயத்தின் போது, இந்தியப் பிரதமருடனும், மற்றும் தலைவர்களுடனும் மன்னர் பேச்சு வார்த்தைகள் நடத்துவார்.

போபால், பங்களூர், மதுரை மற்றும் பல இடங்களுக்கு மன்னர் விஜயம் செய்வார்.

## "ஆட்சி மொழிச்சட்ட திருத்தம் ஒரு சமரசத்திட்டம்"

### பிரதமர் இந்திரா விளக்கம்

புதுடில்லி, டிச.3



இந்திபேசும் மக்களுக்கும், இந்திபேசாத மக்களுக்குமிடையே சமரச உடன்பாடாகவே ஆட்சிமொழிச் சட்ட திருத்த மசோதா அமைந்துள்ளதென இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, தம்மைப்பேட்டி கண்ட சென்னை மாணவர் தூதுகோஷ்டி ஒன்றிடம் தெரிவித்தார்.

பல்வேறு மொழிபேசும் இனங்களடங்கிய நாடான இந்தியாவில், எல்லாத்தரப்பினரையும் திருப்திப்படுத்துவது இலகுவான காரியமல்லவென்றும் பிரதமர் கூறினர்.

ஆட்சிமொழிச்சட்ட திருத்த மசோதா, உண்மையில் ஓர் அரசியல்சாஸனத்திருத்தத்துக்குச் சமமே என்றும் அவர் மாணவர்களிடம் கூறினர்.

## ஆட்சிமொழித் திருத்தமசோதா அண்ணுவுக்குத் திருப்தியில்லை

ஆட்சிமொழிச்சட்ட திருத்த மசோதா, பூரணமான திருப்தியளிக்கவில்லை எனத் தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை நேற்றுப் புதுடில்லியில் கூறினர்.

இந்திய அரசியல் சாஸனத்துக்கு ஒரு திருத்தமாக இம் மசோதாகொண்டுவரப்பட்டிருந்தால் தாம்மகிழ்ச்சியடைந்திருப்பாரெனவும் அவர் குறிப்பிட்டார்.

சிவசேனை போன்ற இயக்கங்கள், நாட்டின் ஒற்றுமையைக் குலைப்பனவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



பம்பாயில் ஒருகூட்டத்தில் பேசுகையில், மொழிவாரி ராஜ்யங்களின் நோக்கம் இந்திய ஒற்றுமைக்கு வழிவகுப்பதேயாகுமன்றி அவை தனித்தனியாக இயங்குவதென்பதல்ல என இந்திய உள்துறை மந்திரி திரு. சவான் கூறினர்.

## அமெரிக்க பாதுகாப்பு

வாஷிங்டன், டிசெ 3

அமெரிக்காவிலுள்ள அணுசக்தி நிலையங்களையும், இராணுவ ரீதியிலல்லாத தளங்களையும் சர்வதேசப் பரிசோதனைக் குட்படுத்த அமெரிக்கா தயாராகவிருப்பதாக அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சன் இங்கு அறிவித்தார்.

மற்றைய நாடுகளும் இதே போல் செய்ய முன் வந்தால், அமெரிக்காவும் அதற்குத் தயார் என்றுர் அவர். மற்றைய நாடுகள் கேட்காத பாதுகாப்பு எதையும் தமது நாட்டுக்குத் தாம் கேட்க முன்வரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஈரானுக்கு ரஷ்ய ஆயுதம்

மாஸ்கோ, டிசெ.3

ஈரானிய இராணுவ தூதுக்கோஷ்டியொன்று மாஸ்கோ வந்து சேர்ந்துள்ளது.

அத்தூதுகோஷ்டி சோவியத் பாதுகாப்பு மந்திரியையும் செஞ்சேனைத் தளபதியையும் சந்தித்தது.

தூதுகோஷ்டியின் நோக்கங்களில் ஒன்று ரஷ்யாவிடமிருந்து ஆயுதங்கள் வாங்குவதாகும்.

## மணிப்புரியில் காங்கிரஸ் ஆட்சி

மணிப்புரி, டிசெ. 3

மணிப்புரி சட்டசபையின் காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சியின் தலைவர் திரு. கொயிரான் சிங், 32 அங்கத்தவர்களடங்கிய சட்டசபையில் தமது கட்சியில் 18 பேர் இப்போதிருப்பதாகவும், இன்னும் ஒருவர் சேருவார் என எதிர்பார்ப்பதாகவும் கூறினர். விரைவில் ராஜ்யத்தில் அரசாங்கம் அமைக்கும் சந்தர்ப்பம் தமக்குக் கிடைக்குமென அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## 35 லட்சம் தொன் உணவு தானியம்

வாஷிங்டன், டிசெ. 3

அடுத்த வருடம் முற்பகுதியில், அமெரிக்கா இந்தியாவுக்கு 35லட்சம் தொன் உணவுத் தானியம விற்குமென இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டக்டர் மீது புகார்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து மாதகல் வழியாகக் கீரிமலை செல்லும் இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணஞ்செய்த ஒருவர் மேற்படி பஸ்ஸில் கடமையின்றிப் பிரயாணஞ் செய்த பஸ் கண்டக்டர் ஒருவரால் அவமானப்படுத்தப்பட்டதாக இ. போ. ச. பிராந்திய முகாமையாளருக்குப் புகார்க் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவர் தமது புகாரில் குறிப்பிட்டிருப்பதாவது;

அந்தக் கண்டக்டர் தம்மைக் கெட்ட வார்த்தைகளால் தூஷித்ததாகவும், தாக்க முற்பட்டதாகவும் அச்சமயம் பஸ்ஸிலிருந்த கண்டக்டரும், சாரதியும் மௌனம் சாதித்ததாகவும் அந்தப் பிரயாணி தமது புகாரில் குறிப்பிட்டுள்ளார். [நி]

## சைப்ரஸ் பிரச்னையில் கிரீஸ்-துருக்கி சமரசம்

### இரு நாட்டுத்துருப்புகள் வாபஸாகும்

அதென்ஸ், டிசெ. 3

சைப்பிரஸ்மீது கிரீசுக்கும் துருக்கிக்குமிடையே சமரசம் ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையேயான சமரச உடன்பாட்டின் விபரங்கள் நேற்று அதென்ஸில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன.

இந்த உடன்பாட்டின்கீழ் 1960-ல் சூரிச்சில் செய்யப்பட்ட கிரேக்க-துருக்கி ஒப்பந்தத்தின்கீழல்லாத ஏனைய கிரேக்க, துருக்கிய துருப்புகள் அனைத்தும் சைப்பிரஸிலிருந்து வெளியேறவேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சனின் பிரதிநிதியான திரு. வான்ஸ், சைப்பிரஸ் ஜனுதிபதியான வண. மக்காரியோசுடன் நேற்றுத் தமது பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தினர்.

சைப்பிரஸின்பாதுகாப்புப் பற்றியே இருவரும் பேசினர்.

நிக்கோஸியாவிலிருந்து கிடைக்கும் செய்திகள், சைப்பிரஸ் தேசிய பாதுகாவலர்படை கலைக்கப்பட வேண்டுமென்ற துருக்கியின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வண. மக்காரியோஸ் இசையவில்லை எனக் கூறுகின்றன.

இரு நாடுகளுக்கிடையேயும் ஒரு விரிவான அடிப்படையில் ஆயுத பரிகரணம் பற்றிய உடன்பாடு ஏற்படும் பட்சத்தில்தான், இந்தப் பிரச்னையும் ஆராயப்படவேண்டுமென வண. மக்காரியோஸ் தெரிவித்துள்ளாராம்

## "இஸ்ரேல் வெளியேருதவரை மேற்காசியாவில் அமைதிஇல்லை"

மாஸ்கோ' டிசெ 3

கடந்த மேற்கு ஆசியப் போரில் கைப்பற்றப்பட்ட அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புக்கள் வெளியேருத வரை மேற்கு ஆசியாவில் சமாதானம் ஏற்பட வழி இல்லைஎன சிரியாவும் ரஷ்யாவும் வலியுறுத்தியுள்ளன.

சிரியப் பிரதமரின் மூன்று நாள் ரஷ்ய விஜயத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட ஒரு கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

சோவியத் பிரதமர், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசி ஆகியோர் தம்மை சிரியாவுக்கு வருமாறு சிரியப் பிரதமர் விடுத்துள்ள அழைப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளனர். திகதிகள் பின்னர் வெளியிடப்படும்.

## போக்குவரத்து சீர்கேடு

யாழ்ப்பாணம், திங்கள்

கடும் மழை காரணமாக காரைநகர் தார்போடாத வீதிகள் சேற்று நிலமாகவும் மக்கிக் கற்கள் நிறைந்த இடமாகவும் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு சீர்கெட்டுள்ளது. இத்துடன் இங்கு மின்சார வசதியும் இல்லாததால் பொதுமக்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளார்கள். கற்கள் பரவப்பட்டு சேருகக் காணப்படும் முக்கிய சடையார் நடுத்தெரு போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ள காரணத்தால் காரைநகர் சிவன்கோவில் உற்சவத்திற்கு காவடிகளும், அடியார்களும் செல்லமுடியாத நிலையில் இருக்கும் எனவே உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

காரைநகர் நலன்புரிச் சங்க காரியதரிசி திரு. எஸ். செல்லத்துரை உள்ளூராட்சி உதவிக் கமிஷனர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகருக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு கேட்டுள்ளார். [வி. நி]

## விவசாய படைக்கு தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து விவசாயப் படையில் சேர்வதற்கு நூற்றுக்கணக்கான வாலிபர்களை யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவு செய்தார்.

இப்படையில்சேரும் வாலிபர்களின் எதிர்காலம் பூரண சுதந்திர வாழ்க்கையாக இருக்குமெனவும், 6 மாதத்தின் பின்னர்விவசாயப்படை வீரர்களுக்கு இலவசமாக வயற்காணிகள் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதென்றும் அப்பொழுது எம். பி. கூறினர்.

கட்சிவெறுபாடு இனமத வேறுபாடின்றியே தான் யாழ்ப்பாணத்தில்விவசாயப் படை விரர்களைத் தெரிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினர் [வி, நி]

## "கொம்பனித்தெரு தபால் நிலயத்தை மூடாதீர்"

கொம்பனித்தெரு, ஞாயிறு

தற்பொழுது கொம்பனித்தெரு தபால் கந்தோர் இருக்கும் இடத்தை கட்டிடச் சொந்தக்காரர் தங்கள் சொந்தத் தேவைக்குகேட்டு இருப்பதன் காரணமாக டிசம்பர்மாதக் கடைசியில் இது மூடப்படவிருப்பதாகவும், கொம்பனித்தெருப் பகுதியில் வேறுவசதியான இடம் கிடைக்காவிடில் கொம்பனித்தெருதபால் கந்தோரை பூரணமாகமூடி கொழும்பு பெரிய தபாற்கந்தோருடன் சேர்க்கப்பட இருப்பதாகவும் தெரிகிறது. இத்தபால் நிலயம் மூடப்படுமானல் இங்கு வசிக்கும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் மிகவும் கஷ்டமடைய வேண்டிவரும். அத்துடன் கொம்பனித்தெருப் பகுதியிலேயே அதிகமான கம்பனிகளும், அரசாங்கக் காரியாலயங்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கொம்பனித்தெரு தபால் நிலயத்தை இடம்மாற்றவோ மூடவோ வேண்டாம் என பொதுமக்கள் பிரதமரையும் தபால்தந்திப் போக்குவரத்து அமைச்சரையும் கேட்டுள்ளதாகத்தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உங்கள் இதயததிலே, அன்பாகிய தெய்வத்தை கோவில் கொள்ளச்செய்துவிட்டால், உலகமனைத்தும் உங்களுக்கு நட்பாகிவிடும். நீங்கள் மேற்கொள்ளும் எவ்வித தொண்டுக்கும் இயற்கையின் சக்திகளனைத்தும் உங்களுக்குத் துணைபுரியும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க ஸு கார்த்திகை மீ 18உ (4-12-67)

## சிக்கனம் வேண்டும்

இலங்கையின் ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து விலைவாசிகள் அதிகரித்து வாழ்க்கைச்செலவு உயர்ந்துள்ளது. வசதிபடைத்தவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படவில்லை. வசதி குறைந்த, வாழ்க்கையையே ஒரு போராட்டமாக அனுபவித்துவந்த, வரும், சாதாரண எளியமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அன்றாட உணவுக்கே பெரும் போராட்டமும் தியாகமும் செய்யவேண்டிய நிலையிலுள்ளனர்.

வாழ்க்கைச் செலவுக் கஷ்டத்தை சமாளிக்கஅரசாங்க ஊழியர் தனியார் துறை ஊழியர் சம்பள உயர்வு கோருகின்றனர்; சிலருக்கு சம்பளஉயர்வு கிடைத்தும் உள்ளது. மற்றும் பலரும் தமக்கும்சம்பள உயர்வு தரவேண்டுமெனக் கோருகின்றனர். இதற்காகப் போராட்டம் நடத்தவும் ஆயத்தம் செய்கின்றனர்.

வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்காக சம்பளத்தை உயர்த்திக் கொண்டே போனால், நாட்டுமக்கள் அனைவருக்கும் அதனால்பயன்கிடைக்குமென எதிர்பார்க்கமுடியாது. வாழ்க்கைச்செலவு உயர்வைக் குறைப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, அதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும். உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்றும் செலவைச்சுருக்க வேண்டுமென்றும் மேடைகளிலும் பத்திரிகைகளிலும் வேண்டுகோள் விடுத்தால்மட்டும் போதாது. தலைவர்களே இதற்கு வழிகாட்டவேண்டும்.

இந்தியாவில் உணவு நெருக்கடி ஏற்பட்டதும் அப்போது பிரதமராக இருந்த திரு. லால்பகதூர் சாஸ்திரி வாரத்தில் ஒரு நேர உணவைத் தியாகம் செய்யுமாறு மக்களைக் கேட்டதுடன் தாமும்திங்கள் தோறும் இரவு உணவைத் தியாகம் செய்தார். அரசாங்க செலவுகள் குறைக்கப்பட்டன. விருந்து வைபவங்கள் பலரத்துச்செய்யப்பட்டன. இறக்குமதிகள் பல நிறுத்தப்பட்டன. சாஸ்திரியின் ஒரு நேர உணவுத் தியாகத்தினால் உணவுப் பிரச்னை குறைந்துவிடுமா, விடாதா என்பதல்ல, மக்களுக்குஉற்சாகத்தையும், நிலைமையை உணர்ந்துதியாகமனப்பான்மையையும்ஏற்படுத்த அது உதவியது.

இங்கும் தலைவர்கள் தாமேசிலதியாகம்செய்து மக்களுக்கு வழிகாட்ட வேண்டியது அவசியம்.

## சபாஷ் மலலசேகரா!

51 தினங்களாக வகுப்புக்களைப் பகிஷ்கரித்து, வேலைநிறுத்தம் செய்து வந்த பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள் இன்று பகிஷ்கரிப்பைக் கைவிட்டு வகுப்புகளுக்குத் திரும்பவிருக்கிறார்கள் என்று கிடைத்துள்ள செய்தி பெற்றோர்களுக்கு மட்டுமல்ல இந்தநாட்டின் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையும் அக்கறையுமுள்ள அனைவருக்குமே ஆறுதலும் மகிழ்ச்சியுமளிப்பதாகும்.

மாணவர்களின் கோரிக்கையில் நியாயமிருக்கிறதென்பதை நாம் பல தடவைகளிலும் இப்பத்தியில் எடுத்துக்காட்டியிருந்தோம். எனினும் வகுப்புக்களைத் தொடர்ந்து பகிஷ்கரித்து வருவதால் மாணவர்களே பெரிதும் பாதிக்கப்படுவார்களென்றும் தெரிவித்திருந்தோம். மாணவர்கள் தங்கள் கோரிக்கையின் நியாயத்தை சரியான முறையில் உணர்த்திவிட்டார்கள். அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். எனவே அவர்கள் வகுப்புக்களுக்குத் திரும்புவது வரவேற்கத்தக்கது. மாணவர்கள் விஷயத்தில் தேசீய உயர் கல்விச் சபைத்தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா நல்ல முயற்சி செய்துவெற்றியீட்டியுள்ளார். மாணவர்கள் மட்டுமல்ல பெற்றோரும் மற்றோரும் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளார்கள். நாமும் அவருக்கு 'சபாஷ்' தெரிவிக்கிறோம்.

## சைப்பிரஸ் சமரசம்

சைப்பிரஸ் சம்பந்தமாக மோதலில் ஈடுபட்டு வந்த துருக்கியும் கிரீஸும் ஒரு சமரச உடன்பாட்டுக்கு வந்துள்ளன. இது உலக சமாதானத்துக்கு நம்பிக்கையளிப்பதாகும்.

கிரீஸ் துருக்கி, சைப்பிரஸ் ஆகிய பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்கள் ஒன்றுசேர்ந்து நடத்திய பேச்சு வார்த்தைகளினால் ஏற்பட்ட நற்பயன்என்று சொல்லலாம். சைப்பிரஸ் பிரச்னை சம்பந்தமாகதுருக்கிக்கும் கிரீஸுக்கும் ஏற்படவிருந்த யுத்தத்தைத் தடுத்து அங்குஅமைதியை நிலைநாட்ட பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்துகொண்டிருக்கிறார்கள். இதனால்தான் யுத்தம் ஏற்படாமல் தவிர்த்துக்கொள்ளவும் சமாதானம் ஏற்படவும் வழிகிடைத்தது.

துருக்கி, கிரீஸ் சமரச உடன்பாடு நிலை நின்று வியட்னாம்போன்ற நெருக்கடிகள் தீரவும் உலகசமாதானம் ஏற்படவும் வழிகாட்டுமென எதிர்பார்ப்போம்.

# ஒரு பகுதியை நசித்து நிலை உருவாக்க வேண்

## கல்வியில் துவேஷம் காட்டுவதுநாட்டுக்குத்தீங்கு

மனித வாழ்க்கையுடன் இணைந்திருப்பது கல்வி. "பொதுவாகக்கல்வியில்எவ்வித பாகுபாட்டையும் கல்வியே எதிர்க்கிறது" என சர்வதேச அறிக்கை கூறுகிறது. உள்நாட்டவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி வசதிகளை வெளிநாட்டவர்களுக்கும் அளிக்கப்படவேண்டுமென மனித அடிப்படை உரிமை சாசனத்தைப்பின்பற்றிவரும் சர்வதேச கல்வி ஸ்தாபனம் அரசாங்கங்களைக் கேட்டுக் கொள்கிறது.

தற்போது யாழ்ப்பாண வட்டாரத்திலிருந்து விஞ்ஞான ஆசிரியர்களை வேறு இடங்களுக்கு மாற்றும் திட்டம் 1956-ம் ஆண்டு தொடங்கி அரசாங்கத்தால் பின்பற்றி வரும் பாகுபாட்டுக் கொள்கையைத் தீவிரப்படுத்துவதாகும். "ஒரு பிரதேசத்தில் [யாழ்ப்பாணத்தில்] தேவைக்கு மேல் அதிகமாக விஞ்ஞானப் பட்டதாரிகள் இருப்பதும் அவர்களை வேறு பிரதேசங்களுக்கு மாற்றுவதற்குப் போதனாமொழி இடையூறாக இருப்பதும்" என்ற இப்படியான துவேஷக் கொள்கை உயர்தரக்கல்விக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் இடம் பெற்றிருக்கிறது. 1967/68-ல் இலங்கை பூராகவும் தேவைப்படும் 6486 பட்டதாரிகளில் யாழ்ப்பாணத்துக்குத் தேவைப்படுவது 642 பட்டதாரி ஆசிரியர்கள் மாத்திரமே. (விஞ்ஞான ஆசிரியர் உட்பட) ஆனால்இத்தொகையில் சாதாரண ஜி.சி.ஈ. யில் உள்ள மாணவர்களை படிப்பிப்பதற்கு பெருந்தொகையான விஞ்ஞான ஆசிரியர்கள் இருப்பதே அரசாங்கத்தாரின் மனக்கவலையாகும். வெளிநாடுகளின் கல்வி நிலையோடு ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து எமது நாட்டுக் கல்வித்தரம் பின் தங்கியிருந்த போதிலும் இங்குள் ஒரு பிரதேசத்தில் கல்வித்தரத்தை ஏனைய பிரதேசங்களின் தரத்துக்கு நேராகக் குறைக்க அரசாங்கம் முயல்வது விந்தையில் விந்தையே! அது அநாகரிகமானதும் தேசியப் பற்றற்றதுமாக இருக்கிறது!! ஒரு நூற்றாண்டுக்குமேலாக யாழ்ப்பாண வட்டாரத்தில் கல்வித்தரம் உயர்ந்திருந்தால் அது தனியார் துறையின் பெரு முயற்சியினாலேயன்றி அரசாங்கத்தினது முயற்சியாலன்றுஎன கோல்புறூக் கமிஷனும் வேல் கமிஷனும் கூறியிருக்கின்றன. வேறு ஓர் இடத்தில்கல்வியைஊக்குவிப்பதற்காக ஒரு குறித்த இடத்தில் உள்ளகல்விநிலையைச்சிதைப்பதற்கு அவசியமில்லை. ஆசிரியத்தொழில் கிடையாது திண்டாடுகிற நூற்றுக்கணக்கான பட்டதாரிகளை ஆங்காங்கே அமர்த்தி கல்வித்தரத்தை உயர்த்த அரசாங்கம் எத்தனிப்பது தான் நேரிய, நீதியான பாதை.

இந்நாட்டில் தற்போது தமிழ்க் கல்வி ஒருவனுந்தரமாகி வருகிறது. அந்த வனுந்தரத்தில் யாழ்ப்பாணமே ஒரு தமிழ்ச் சோலை எனலாம். அதையுங்கூட வெட்டி வீழ்த்த எத்தனிப்பது மனதுக்கு வேதனையைக்கொடுக்கிறது. சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் வடகீழ் மாகாணங்களுக்கு வெளியே முஸ்லிம் பாடசாலையல்லாத வேறு எந்த அரசினர் உயர்தரத் தமிழப்பாடசாலைக்கு ஒரு விஞ்ஞான கூடத்தையோ அல்லது ஒரு பட்டதாரி ஆசிரியரையோ அரசாங்கம் கொடுக்கவுமில்லை, அதனை உயர்தரப் பாடசாலையாக்கவுமில்லை. தேசியமயமாக்கப்பட்ட, பின்பு அரசினர் பாடசாலைகளிலும் வித்தியாதிபதியினால் நடாத்தப்படும் பாடசாலைகளிலும் மாணவர்களை அனுமதிப்பதிலும் உள்நாட்டவர்களுக்குமுதலிடம் அளிக்கப்படவேண்டுமென நிரந்தரக் காரியதரிசி சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தார். இக்கொள்கை காரணமாக பல பாடசாலைகளில் தமிழ்ப்

[விஞ்ஞான ஆசிரியர் இடமாற்றம் குறித்து யாழ். பெற்றோர் சங்கத் தலைவர் திரு. கு. நேசையாவும் செயலாளர் திரு. சி. பொன்னையாவும் கல்விஅமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் இது.]

## இன்றைய பலன்

4-12-67
திங்கட்கிழமை
கார்த்திகை மாதம்
18-ந் திகதி

நட்சத்திரம்- பூராடம் இரவு 9-31 மேல் உத்தராடம்

திதி- திருதியை மாலை 5-01 மேல் சதுர்த்தி

சுபநேரம்- 12-16-1-46
ராகுகாலம்- 7-46-9-16

மேஷம்- தெய்வபலம், தியாகச் சிந்தை.

ரிஷபம்- பாதையில் பழுதுண்டு பார்த்து நட.

மிதுனம்- உறவாடும் நிலை உற்சாகமுண்டு.

கடகம்- கடின சிந்தை காரியத்தடை.

சிங்கம்- தந்தைவழி ஆதரவு, தன்மான வாழ்வு.

கன்னி- தொழில்நலன் தொடர்புகள் பெருகும்.

துலாம்- பொருள்வரவு, புத்துணர்ச்சி.

விருச்சிகம்- மந்தநிலை, மறதிக்குணம்.

தனுசு- உறவில் முறிவு ஊமைக்கண்ணீர்.

மகரம்: மேம்பட உரைத்தல் மேலிடத்தில் ஆதரவு.

கும்பம்- அவசர முடிவு, அநுகூலத்தடை.

மீனம்- நம்பிக்கை வளரும். நலமும் சேரும்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

# தொழில் நீதிமன்ற விசாரணை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

## முதல் நாள் 6 வழக்குகள் விசாரணை

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக நேற்று ஆரம்பமான தொழில் நீதிமன்றத்தில் 6 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. யாழ்ப்பாண தொழில் நீதிமன்ற தலைவர் திரு, ஆர். சுப்பிரமணியம் முன்னிலையில் யாழ்ப்பாண கச்சேரியில் விசாரணை நடைபெற்றது. இன்று காலை தொடர்ந்து விசாரணை நடைபெற்றது.

### முதல் வழக்கு

முதலாவதாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட வழக்கில், கூட்டுறவு சங்கத்தின மனேஜர் ஒருவரை, சங்க நிர்வாகம், முன்னறிவித்தலின்றி வேலையிலிருந்து நீக்கியதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. விசாரணையின் போது, நிர்வாகிகளின் பிரதிநிதி, நிர்வாகசபை கூடிய பின்பு சில ஆதாரங்களை தமது பக்க சார்பில் சுட்டிக் காட்டுவதாக தெரிவித்தார்.

தொழில் நீதிமன்ற வழக்குகளுககு வரும் போது சகல ஆயத்தங்களுடனும், வரவேண்டியது அவசியமென்றும், நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்கக் கூடாதென்றும் அவரை எச்சரித்த தலைவர், வழக்கை ஒத்திவைத்தார்.

### பெயர் தெரியாது

இரண்டாவது வழக்கில் வடமராட்சியிலுள்ள ஒரு தனியார் கல்வி நிலையத்தை சேர்ந்த பெண் ஊழியர் ஒருவர், தம்மை காரணமின்றி வேலையிலிருந்து நீக்கியதாக, நிர்வாகிகள் மீது புகார் செய்திருந்தார்.

நிர்வாகியின் பெயரை அவர் தெரிவிக்காது நிர்வாகி மட்டுமென்றே புகாரில் குறிப்பிட்டிருந்தால். பெயரை அறிந்து வரும்படி அவரிடம், தலைவர் கூறி வழக்கை இன்று காலைவரை ஒத்திவைத்தார்.

### ஊழியருக்கு ரூபாய் 250

மூன்றுவது வழக்கில், யாழ்ப்பாண மாகாண கூட்டுறவு வங்கி யூனியனை சேர்ந்த ஊழியர் ஒருவர், தம்மை முன்னறிவித்தலின்றி வேலைநீக்கம் செய்ததாக, புகார் செய்திருந்தார். இதனை விசாரணை செய்த தலைவர், இருதரப்பினருக்குமிடையில் ஒரு சமரச உடன் பாட்டை ஏற்படுத்தினார். இதன் படி நிர்வாகிகள், ஊழியருக்கு, அவரது பிணைப்பணம் ரூபா 90 உட்பட 250 ரூபா அளிக்க சம்மதித்தனர்.

ஊழியரிடம் இருப்பதாக கூறப்படும், யூனியனின் சொத்துக்களான, ஒரு அரிக்கன் லாம்பு, மூன்று பட்டரி டோர்ச் லைட், ஒரு வாளி இவற்றை திரும்பவும், ஒப்படைக்கும்பட்சத்தில், மேலும் 25 ரூபா அளிப்பதாக நிர்வாகிகள் சம்மதித்தனர். இரு தரப்பினருக்கும் வழக்கறிஞர்கள் ஆஜரானார்கள.

### மாமன்-மருமகன் தகராறு

மற்றொரு வழக்கில், மருமகனான ஊழியர் ஒருவர், தமது தாய் மாமனரான முதலாளி மீது முன்னறிவித்தலின்றி வேலையிலிருந்து நீக்கியதாகவும், சில மாதங்களுக்குரிய பணம் தரவில்லையென்றும், புகார்செய்திருந்தார். முதலாளி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சமூகமளிக்கவில்லை. ஊழியர் சார்பில் ஆஜரான வழக்கறிஞரும், நீதிமன்ற தலைவரும, சமரசம் ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் செய்தனர். ஆனால் இருதரப்பினரும், விட்டுக்கொடுக்காததினால் தலைவர்வழக்கை ஜனவரி 4-ம்திகதிக்கு ஒத்தி வைத்தார்.

மற்றொரு முதலாளி தொழிலாளி தகராறு வழக்கு சமரசமாக தீர்த்து வைக்கப்பட்டது.

### 25 ரூபாவை ஏற்க மறுத்தார்

கடைசியாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கில் வாடகைக்கார் சாரதி, கார் சொந்தக்காரரிடம், கடந்த இரண்டரை மாத சம்பளக் காசாக ரூபா 300 கோரியிருந்தார். கார்ச் சொந்தக்காரர் தரப்பில், 25 ரூபா கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டது. தலைவரும் சாரதியை இதை ஏற்கும்படி கேட்டுக் கொண்டார். சாரதி அதனை ஏற்க மறுத்தார். இதைத் தொடர்ந்து, சட்டவிரோதமான தொழிலுடன் சம்பந்தப்பட்ட விவகாரமாதலால், இந்த வழக்கை தொழில் நீதிமன்றத்தில் விசாரணைசெய்ய முடியாதென தலைவர் உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...த்துத்தான் சம கல்வி ...ண்டுமா ?

...ில் யாழ்ப்பாணமே ...தமிழ்ச் சோலை என ...அதையுங்கூட வெட்டி ...ந எத்தனிப்பது மன ...வேதனையைக்கொடுக் ...சுதந்திரக் கட்சியின் ...யில் வடகிழ் மாகா ...ளுக்கு வெளியே முஸ் ... பாடசாலையல்லாத ...எந்த அரசினர் உயர் ...தமிழப்பாடசாலைக்கு ...விஞ்ஞான கூடத் ...பா அல்லது ஒரு பட்ட ...ஆசிரியரையோ அர ...ம் கொடுக்கவுமில்லை, ... உயர்தரப் பாட ...பாக்கவுமில்லை. தேசிய ...க்கப்பட்ட, பின்பு ...னர் பாடசாலை

பிரிவுகளை மூடவேண்டி நேர்ந்தது அதன்பின் வந்த புதிய அரசாங்கத்திலும் இப்பாகுபாட்டில் நீதியான முறையில் மாற்றங்கள் செய்யப்படவில்லை. பெருந்தொகையான தமிழர்கள் வசிக்கும் கொழும்பு வட்டாரங்கூட தமிழ்க் கல்வியைப் பொறுத்தளவில், ஒருபாலைவனமாக மாறி வருகிறது. றேயல் ஆரம்பபாடசாலையிலும், றேயல் கல்லூரியிலுங் கூட தமிழ் மாணவர்கள் தொகை சமவிகிதபாகத்திலும் பார்க்க எவ்வளவோ குறைந்துவிட்டது. இப்பெரும் நகரில் ஓர் உயர்தர மகளிர் பாடசாலையே கிடையாது யாழ்ப்பாண வட்டாரத்துக்கு வெளியே நாலில் மூன்று பகுதியிரான தமிழ் மக்கள் வாழ்ந்தும் ''யாவர்க்கும் சமகல்வி வசதிகள் வழங்கப்படல் வேண்டும்'' என்ற சர்வதேசக் கொள்கைக்கு மாருக லட்சக்கணக்கான தமிழ்ப் பிள்ளைகளுக்கு பிறம்பானதும், தரங் குறைந்ததுமான கல்விகூட மறுக்கப்பட்டு வருகிறது. இந்த அபிவிருத்திக் காலத்தில் இந்கி நாடு முழுவதிலுமே தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவான கல்விவசதிகள் கிடையாமல்நாம் பரிதவிக்கின்றோம். நிலை இப்படியானலும் இனத்துவேஷ அடிப்படையில் கலவிப் பாகுபாடுகள் இருந்தே வருகின்றன. பள்ளிக்கூட மாணவர் டாப்புக்களை நாம் ஆராய்ந்தால் இந்தப் பாகுபாடுகளை நன்கு புரிந்துகொள்ளலாம். இந்நாட்டில் சிங்களம் பேசும் மக்கள் 69 வீதம், தமிழ்பேசும் மக்கள் 29 வீதம், ஆகும் சிங்களப் பள்ளிப்பிள்ளைகளின் தொகை 76 வீதம், தமிழ் பேசும் பிள்ளைகளின் தொகை 23 வீதம், வித்தியேகதயாவிலும் வித்தியரங்காவிலும் 100 வீதம் சிங்களம்கள்ளைகள். இலங்கை சர்வகலாசாலையில் சிங்கள மாணவர்கள் 78 வீதம். தமிழ் மாணவர்கள் 21 வீதம் இலங்கை சர்வகலாசாலையிலுள்ள விஞ்ஞானப் பகுதிகளில் மாத்திரம் தமிழ் பேசும் மாணவர்கள் 40 வீதம். இதில் பெரும்பகுதியினர் யாழ்ப்பாணப் பாடசாலைகளிலிருந்தே செல்கின்றனர். ஆசிரியர்களைப் பயிற்சிபண்ணுவதிலும் இந்த இனப்பாகுபாடுகளைக் காண்பிந்தல் கல்விமுறை பூராகவுமே பெருமளவில் பபதிக்கப்படும். பட்டதாரிகள் அல்லாத பயிற்றப்பட்ட ஆசிரியர்களில் சிங்களவர் 70வீதம் தமிழர் 30 வீதம் சில வருடங்களாக தமிழில் பயிற்றப்படிமவர்களின் தொகை அதிகமாகக் குறைக்கப்பட்டு வருகிறது. 1966-ல் 24 பயிற்சிக் கல்லூரிகளிலும் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்கள் 527-ல் 963 பேர் மாத்திரமே தமிழ்ப்போதனு கல்லூரிகளில் இருந்தார்கள். மூன்று சர்வகலாசாலைகளுக்கு சென்ற 800 க்கு மேற்பட்ட ஆசிரியர்களில் ஒருசி தமிழர்மாத்திரமே இலங்கைச் சர்வகலாசாலையில் அனிமதிக்கப்பட்டனர்.

400 மேற்பிரிவு விஞ்ஞான வகுப்புக்களில் 111 வகுப்புகள் மாத்திரம் அதாவது 28 வீதம் தமிழ் மொழியில் உள்ளன இவைகளில் 15ஐ விலக்கி எஞ்சிய வகுப்புகளில் மேற்பிரிவிலுள்ள தமிழ் மாணவர்களுக்கு விஞ்ஞானக்கல்வி கிடையாது விஞ்ஞானக் கல்வியுள்ள 5 பிரிவுகளில் 3 பிரிவுகள் அதாவது கொழும்பு தெற்கு கண்டி, இரத்தினபுரியில் இக்கல்வி திருப்திகரமாகவில்லை. 1992 சாதாரண வகுப்புகளில் 567 வகுப்புகள் [28வீதம்] தமிழ்ப் போதனுமொழியில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு தெற்கு வெளியேயுள்ள பிரதேசங்கள்யாவிலும்இக்கல்வி மந்தரமாகக் காணப்படுகிறது.

தமிழ்ப்பிள்ளைகளை எதிர்நோக்கியிருக்கும் இவ்விதமான அபாயகரமான காரணத்தாலும், அரசாங்கங்களின் விசுவாசமற்ற நடவடிக்கை காரணத்தாலும் தமிழ்ப்பிள்ளைகளின் ஆரம்ப,மத்திய உயர்தரக் கல்வியை வட்டார ரீதியில் பரிசீலனை செய்வதற்கும், அவர்களுக்குத் திருப்திகரமான கல்வி வசதிகளைப் பேணித்தருவதற்கும் ஒரு நீதி மனப் பான்மையுடைய உயர்தரசபையை ஏற்படுத்துவதற்கான அவசியத்தை யாழ் பெற்றோர் சங்கம் உணர்ந்து வற்புறுத்துகிறது. பள்ளிப்பிள்ளைகள் யாவற்கும் தேவைப்படும் சகல கல்வி வசதிகளையும் சமப்படுத்தி உதவுவதற்கு ஏதுவாக நூற்றுக்கணக்கான சிங்களப் தமிழ்ப்பட்டதாரிகள் வேலையை நாடியிருக்கிறார்கள். ஒரு வட்டாரத்திலுள்ள கல்வித் தரத்தை சீர்குலைக்காது, இவர்களுக்கு வேலையைக் கொடுத்து சம கல்வியை அளிப்பது அரசாங்கத்தின் தலையாய கடனுகும்.

இந்நாட்டுப் பிரஜைகளில் யாரா'வது ஒரு பகுதியினருக்கு மாருக கல்விப் பாகுபாடுகளை உண்டு பண்ணுதவாறு கல்வி அமைச்சுகளிலும் கல்வி இலாகாவிலும் வரவேற்கத்தக்க மாற்றங்களைச் செய்வது புத்திகரமானதும், நாட்டு ஒற்றுமைக்கு ஏதுவானதுமாகும். ஒவ்வொரு வட்டாரத்துக்குமுரிய கல்வித் திட்டத்தை அமைப்பதில் அந்தந்த வட்டாரத்துக்கென்று ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட கல்விச் சபையுடன் ஆலோசித்தல் வேண்டும். 1907-ல் கல்விச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வட்டாரப்பாடசாலைச் சபைகள் போன்ற சபைகளை உண்டுபண்ணி ஒவ்வொரு வட்டாரத்துக்குரிய தேவைகளைக் கண்காணித்து கல்வித்திட்டங்களை தயார் பண்ணி அவைகளை அமுல் நடத்த மந்திரி முற்படவேண்டும். இவ்விதமாகவே ஒருசீரியதேசியகல்வித் திட்டத்தை நாம் உருவாக்க முடியும்.

## ...மாற்றம் குறித்து ...லவர் திரு. கு. ...ரு. சி. பொன்னை அனுப்பிவைத்...

...ம் வித்தியாதிபதியி ...நடாத்தப்படும் பாட ...களிலும் மாணவர்களை ...திப்பதிலும் உள்நாட் ...களுக்குமுதலிடம் அளி ...வேண்டுமென நிரந்த ...ரியதரிசி சுற்றறிக்கை ...ற அனுப்பியிருந்தார். ...காள்கை காரணமாக ...ாடசாலைகளில் தமிழ்ப்

## ...ாரணை ...ரம்பம் ...ிசாரணை

...ாளி மீது முன்னறிவித் ...றி வேலையிலிருந்து ...யதாகவும், சில மாதங் ...குரிய பணம் தரவில்லை ...றும், புகார்செய்திருந் ... முதலாளி தரப்பில் ...ான வழக்கறிஞர், ...மளிக்கவில்லை. ஊழியர் ...பில் ஆஜரான வழக் ...நரும், நீதிமன்ற தலை ...., சமரசம் ஏற்படுத்து ...கு முயற்சிகள் செய் ...ஆனல் இருதரப் ...நம், விட்டுக்கொடுக் ...தினல் தலைவர்வழக்கை ...வரி 4-ம்திகதிக்கு ஒத்தி ...ந்தார்.

...ற்ெருரு முதலாளி ...ாழிலாளி தகராறு ...கு சமரசமாக தீர்த்து ...க்கப்பட்டது.

### ...ருபாவை ...க மறுத்தார்

...டைசியாக விசாரணைக்கு ...கப்பட்ட வழக்கில் ...டைக்கார் சாரதி, கார் ...ந்தக்காரரிடம், கடந்த ...ண்டரை மாத சம்பளக் ...ாக ரூபா 300 கோரி ...ந்தார். கார்ச் சொந்தக் ...ர் தரப்பில், 25 ரூபாய் ...டுப்பதாக தெரிவிக்கப் ...து. தலைவரும் சார ...ய இதை ஏற்கும்படி ...ட்டுக் கொண்டார். ...தி அதனை ஏற்க மறுத் ...ர். இதைத் தொடர்ந்து ...விரோதமான தொழி ...ன் சம்பந்தப்பட்ட ...காரமாதலால், இந்த ...க்கை தொழில் நீதிமன் ...தில் விசாரணைசெய்ய ...யாதென தலைவர் உத் ...விட்டார்.

## ஆசிரியருக்கு கடிதங்கள்

# உலகசைவமன்றம் வேண்டும்

திருவெம்பாவை முன்னு? பின்னு? என்ற கேள்விக்கு இலங்கையில் வாழும் சைவ மக்களுக்கு முடிவான முற்றான பதிலை யாரும் கொடுக்க முன் வராதது மிகவும் வேதனைக்குரியதாகும்.

இரு சாரார் இருவேறு கருத்துக்களை செய்தித்தாள்கள் மூலமாக வெளியிட்டு சாதாரண பாமரமக்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளனர். இதைத் தவிர வேறு ஒன்றும் சாதிக்கவில்லை.

சைவ உலகு மிகவும் தொன்மையும், பண்பாடும், அன்பும் கொண்டதுஎன்பது எண்ணம் இன்று உண்மை தானு? என்ற கேள்வி பிறக்கின்றது.

இவ்வண்ணமான இருவேறு கருத்துக்களை நன்ருகச் சிந்தித்து நடுநிலைமை மிகுந்த சைவ பேரறிஞர்கள் விரைவில்ஒரு சான்ருன முடிவுக்கு வரவேண்டியது மிகவும் அவசியம். அத்தோடு பேரறிஞர்கள் கூறுகின்ற முடிவினை அனைவரும ஏற்று ஒழுக வேண்டியது சைவமக்களின் கடமையாகும்.

எமக்கு உலக சைவ மன்றமொன்று அவசியம் வேண்டும் அதன் மூலம் முன் கூட்டியே சைவ மக்களுக்கு பகிரங்கமாக அறிவித்து உலக சைவ மக்களை சைவ நெறியில் வழி நடத்த வழிவகைகளைச் செய்ய வேண்டுமென சைவ அறிஞர்களை பணிவுடன் வேண்டுகின்றேன்.

திருக்கோணமலை சிவன் கோவிலை பரிபாலிக்கும் பரியாலன சபையினர் திருவெம்பாவையை 5-1-68ல் நடாத்துவதென்று தீர்மானித்துள்ளனர். காரணம் இங்குள்ள சிக்கலைத் தீர்க்க வேண்டுமென்ற ஆசையும் சைவமக்களின் வழிபாடு ஒரே நாளில் ஒன்ருகச்செய்யப்படவேண்டுமென்றபெரு நோக்கமுமாகும்.

இன்று உலகின் கண் வாழும் சகல சைவமக்களையும் இணைக்க உலக சைவ மன்றம் இல்லை இதனல் திருவெம்பாவைக்கு சிறப்புப் பெற்ற சிதம்பரத்தை பின் பற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

''தென்னுடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்ற நிலைமையையுணர்ந்து சைவமக்கள் இவ்வாண்டு 5-1-68ல் திருவெம்பாவைப் பூசை வழிபாடுகளை கூட்டாகச் செய்ய வேண்டியது தான் தற்போதைக்குச் சரியான வழியாகும்.

இ. சோமசுந்தரம்
செயலாளர்
திருவிஸ்வநாத சுவாமி
(சிவன்) கோவில்
பரியாலனசபை
திருக்கோணமலை

ஃ ஃ ஃ

# 3-ந் திகதி கொண்டாடுவோம்

இலங்கையிலுள்ள வாக்கிய பஞ்சாங்கத்தையும் கணித பஞ்சாங்கத்தையும் இன்று வரை சரியென்று அனுசரித்துவந்த கு. பாலசுந்தரக்குருக்கள் இவ்வருடம் திருவாதிரைக்கு மாத்திரம் இந்திய பஞ்சாங்கங்களையும் காமிகாகம வசனத்தையும் பிரமாணங் காட்டி கூறிக்கொள்வது நியாயமா? இதனல் நாட்டு மக்களுக்கு சந்தேகமும் நம்பிக்கையின்மையும் தோற்றுவிப்பதாகாதா? இவ்வருடம் விநாயக ஷஷ்டி விரதமும் சர்வாலயதீபமும் மாறுபட்டுவந்தது யாவருமறிந்ததே. அதற்கு மௌனஞ்சாதித்துச் சரியென்று ஏற்றுக்கொண்ட குருக்கள் திருவாதிரையை ஏற்றுக் கொள்ளாததேனே?

சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களும் பிரமஸ்ரீ ஆத்மநாத சர்மாவும் சரியான முறைப்படி கு டா. குரு காட்டிய காமிகாகமத்திலேயே பிரமாணங்காட்டியிருக்கிருர்கள். அதுவுமல்லாமல் சுத்தவாக்கிய பஞ்சாங்கவதிபரும், ஆர். பி. ஹரனும், சோதிடகலாநிதி வேலுப்பிள்ளையும், இன்னுஞ் [illegible] இலங்கைப் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்ட தேசரியென்றும் அதனையே கைக் கொள்ளவேண்டுமென்றும் கூறியுள்ளார்கள்.

சைவசமயிகளாகிய நாங்கள் எல்லோரும் மார்கழி மாதம் 3-ந்திகதி (மூன்ருந்திகதியே) திருவாதிரையை கொண்டாடுவோமென ஏகமனதுடன் வேண்டிக்கொள்கிறேன். அதில் ஏதாவது குற்றமோ தோஷமோ ஏற்படின் அது பஞ்சாங்கக்காரரையோ அல்லது மார்கழி 3-ந் திகதி தான் திருவாதிரை சரியென்று நிரூபித்த குருக்கள் மாரையோ அடையட்டும்.

இ. கங்காதரன்
துன்னலை வடக்கு.

# சமூக விரோத செயல்கள் கண்டிக்கப் படவேண்டும்

தந்திப்பகுதி ஊழியர்களின் வேலைநிறுத்தத்தின் பலனுக நாட்டிலே தந்தித் தொடர்புகள் அற்றுப்போய் விட்டதனல் உண்டான நஷ்டம் ஒருபுறமிருக்க புத்தியில்லாத சிலர் செய்துவரும் நாசவேலைகள் அதைவிட ஆயிரம் மடங்கு கூடுதலான நஷ்டத்தை நாட்டுக்கு உண்டாக்குகின்றது.

வேலைநிறுத்தம் செய்தவர்களின் கோரிக்கைகள் நியாயமானவையோ நியாயமற்றவையோ என்பது வேறு கதை. இது பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்மானிக்கப்படவேணடியது. தந்திக் கம்பிகளை அறுப்பதாலும், தந்திக்கம்பங்களைத் தள்ளி விடுவதாலும் கோரிக்கைகளை அடையலாமா?

வேலைநிறுத்தங்கள் சாசுவதமாக நீடிக்கப்போவதில்லை. எப்பொழுதாவது ஒரு நாளைக்கு ஒரு முடிவு வந்தே தீரவேண்டும். வேலைநிறுத்தம் முடிந்தபின் திரும்பிவந்து கம்பிகளையும் கம்பங்களையும் வைத்துக் கொண்டுதான் வேலைசெய்ய வேண்டும். இரண்டொரு நாட்களுக்கு நடக்கும் வேலைநிறுத்தத்துக்காகத் தந்திக் கருவிகளின் மீது கோபம் சாதிப்பது புத்தியுள்ளவர்கள் செய்யும் செயலாகுமா?

மொறட்டுவையிலுள்ள தபாற்கந்தோரில் சில இரவுகளுக்கு முன் தீப்பிடித்துக் கடிதங்களும், மணி ஓடர்களும் எரிந்து சாம்பராகி டெலிபோன் முதலிய தளபாடங்களுக்கும் சேதம் ஏற்பட்டதாம். இது தெய்வாதீனமாக ஏற்பட்ட தீயாயும் இருக்கலாம். அதேசமயம் நாசவேலையாயும் இருக்கக்கூடுமென்று பொலிஸார் கருதுகிருர்கள். தெய்வாதீனமென்ருல் அது தவிர்க்க முடியாதது. நாசவேலையென்ருல் அது கண்டிக்கப் படவேண்டியது. ஒன்றுமறியாத கம்பிகள், கம்பங்கள், கருவிகள்மீது ஆத்திரத்தைக் கொடடுவதால் வேலைநிறுத்தம் செய்வோரின் கட்சி இறுகுமா?

இது ஒருபுறமிருக்க, இவ்வித நாசவேலைகளால் நாட்டுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறதென்பதை அவற்றின் கர்த்தாக்கள் உணருவார்களா?

ஃ ஃ ஃ

அரிசி முதற்கொண்டு எத்தனையோ அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உச்சிக்கு மேல் ஏறிவிட்டதைத் தொடர்ந்து மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும், சொற்ப நேரத்தில் குபேர சம்பத்து பெறுவதற்கு இதுதான் சந்தர்ப்பம் என்று நினைத்துக் கொண்டு ஒன்றுக்குப் பத்தாகக் கொள்ளை லாபம் அடிக்கிருர்கள். எத்தனையோ லட்சக்கணக்கான ஏழை மக்கள் இவர்களுடைய பேராசைப் பேயைத் திருப்திசெய்வதற்காக அரை நேரக் கஞ்சிக்குத் திண்டாடுவதை இந்தக் கொழுத்த முதலாளிகள் காணவில்லையா? மன்னுயிரையும் தன்னுயிர் போல மதித்து எள்ளளவேனும் காருண்ய சிந்தை காட்டவேண்டுமென்ற விழுமிய நோக்கம் இவர்களுக்கு ஏன் உண்டாகவில்லை?

ஃ ஃ ஃ

பல்கலைக்கழகப் படிப்புக்காகச் சென்றுள்ள மாணவ மாணவிகள், கல்வி அதிகாரிகள் இட்ட சட்டதிட்டங்களை மீறி 'அப்படிச் செய்யாதே!' என்று கூக்குரலிட்டுக் கும்மாளம் கொட்டி, அரசாங்கத்தாருக்கும், பெற்ருேருக்கும், பொதுமக்களுக்கும் அளவற்ற தொந்தரவைக் கொடுக்கிருர்கள். 'பல்கலைக் கழகங்களை மூடிவிடுவேன்' என்று கல்வி மந்திரி பயமுறுத்துமளவிற்கு அவர்களுடைய அட்டகாசம் தலைக்கு மேல் போய்விட்டது

ஃ ஃ ஃ

வேலைநிறுத்தங்கள், நாசவேலைகள், கொள்ளையடிப்பு அடம்பிடித்தல்—இப்படியான செயல்களைச் சமூக விரோதமான செயல்கள் என்றே கொள்ளவேண்டும். சமுதாய வாழ்க்கை சுமூகமாக நடப்பதற்கு இவை எவ்வளவு முட்டுக்கட்டையாயிருக்கின்றன? நாட்டின் பொருளாதாரத்தையும், பொதுவாழ்வையும் சீர்திருத்திப் பல வகைகளில் நொண்டியாய்ப் போயிருக்கும் எமது சமுதாயத்தை நல்வழிப்படுத்தப் படாதபாடுபடும் அரசாங்கத் தலைவர்களுக்கும், முக்கியமாகப் பிரதம மந்திரிக்கும், இப்படியான குழப்பங்கள் நரகத்துமுட்கள்போல இருந்து கொண்டு, அவர்களுடைய நேரத்தையும், சக்தியையும் வீணுன விரயமாக்குகின்றன எபன்தை இவர்கள் உணர்வதில்லை.

சமூக விரோதமான இச்செயல்களுக்குப் பொதுமக்கள் உடனடியாகக் கண்டனம் தெரிவித்து அரசாங்கத்துக்குப் பக்கபலமாக உதவவேண்டும்.

நீரழிவு, முடக்குவாதம், மலேரியா இவற்றுடன் மாரடைப்பும் சேர்ந்து கொண்ட ஒரு நோயாளிக்கு மூட்டைப் பூச்சிகளும், நுளம்புகளும், இலையான்களும் நச்சரிப்புக் கொடுத்தால் என்ன மாதிரி இருக்கும்?

# நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

## அறிமுக அட்டைகள் கிடைக்கவில்லையாம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு டிசெம்பர் 12-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. (சாதாரணம்) பரீட்சை எடுக்கும் இப்பகுதி மாணவர்களில் பலருக்கு அறிமுக அட்டைகள் இன்னும் வந்து சேரவில்லையென அறியப்படுகிறது.

## பொலிஸ்........

1-ம் பக்கத் தொடர்ச்சி

பிரதமரின் விஜயத்தின் போது கடமையாற்றுவார்கள். அதே வேளையில் கொழும்பிலிருந்து சுமார் 15 இரகசியப் பொலிஸாரும் இங்கு நிலைமையைக் கண்காணிக்க வந்து சேரலாமென எதிர்பாக்சப்படுகின்றது.

(ந நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# “தேவதாஸை நான் திருமணம்செய்வது உறவினருக்கு விருப்பமில்லை

## அதனால்தான் இறந்தவர் வீட்டில் வசித்துவந்தேன்”

### புனிதவதி கொலை வழக்கில் பற்குணதேவி சாட்சியம்

குரும்பசிட்டி, ஞாயிறு

“1965-ம் ஆண்டில் ஆலயத் திருவிழா வொன்றில் எனது அம்மாவிற்கும் அப்புத்துரை என்பவருக்குமிடையே எந்தவித சம்பவமும் நடைபெற்றதாகக் கூறப்படுவதை, நான் அறியேன். அப்புத்துரை என்ற நபரையே எனக்குத் தெரியாது. தேவதாஸ் உடன் நான் கொண்டிருந்த காதல் உறவுகள் அயலவருக்கும் எனது உறவினருக்கும் நன்கு தெரிந்திருந்த போதிலும் எனது அம்மாவிற்கு இதுபற்றி எதுவும் தெரியாது. நாங்கள் இருவரும் காதல் கடிதங்களை தபால் மூலம் பரிமாறிக் கொள்ளும் வழக்கமில்லை. கிணற்றடிக்குச் செல்லும் வேளையில் காதல் கடிதத்தை வீட்டில் வேலிக்கு மேலாக எறிந்து விடும் போது தேவதாஸ் அவற்றை எடுத்துக் கொள்வார். பதிலுக்கு அவரும் இவ்வாறான செயல் மூலம் எனக்கு கடிதங்களை வீசுவார். இப்படி செய்து வருகையில் எவர் கையிலும் காதல் கடிதங்கள் சிக்கிக் கொள்ளாத வகையில் நடந்து வந்தோம். தேவதாஸ் வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்ற காரணத்தால் எனது உறவினர் எம் காதல் உறவுக்கு எதிர்ப்பும் மறுப்பும் காட்டி வந்தனர். எனது மாமாவினர் தமது பிள்ளைகளில் ஒருவருக்கு என்னை மணம் முடித்து வைக்க விரும்பினர். ஆனால் நானும் எனது தாயாரும் இதற்கு விருப்பம் கொண்டிருக்கவில்லை.”

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நெத்சிங்கா முன்னிலையில் புனிதவதி கொலை வழக்கு தொடர்ந்து விசாரணை செய்யப்பட்ட போது பற்குணதேவி பெரியதம்பி (வயது 21) என்ற இளம் பெண் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பற்குணதேவி குறுக்கு விசாரணையில் மேலும்கூறியதாவது:- யாழ்ப்பாணப் பகுதியில் ஒரு வகுப்பைச் சேர்ந்த பெண்ணுக்கு இன்னொரு வகுப்பைச் சேர்ந்த ஆண்மகன் யாரையும் மணம் முடித்து வைப்பது வழக்கமில்லை என்பதை நான் அறிவேன். எனது காதல் உறவை முறியடித்து பலாத்காரமாக என்னைக் கடத்திச் சென்று தமது பிள்ளைகளில் ஒருவருக்கு மணம் முடித்து வைக்க மாமா திட்டம் போடுவதை மாமியார் மூலம் நான் தெரிந்து கொண்டேன். காலஞ் சென்றவர் வீட்டிற்கு குடியிருக்க நானும் அம்மாவும் கலந்து பேசி ஆலோசனை செய்த பின்னரே சென்றேன். எனது அம்மாவின் அபிப்பிராயம் எதைப்பற்றியும் கவனத்தில் எடுத்துக் கொள்ளாது தேவதாஸை விவாகம் செய்ய உறுதியாக தீர்மானித்திருந்தேன். எமது திருமணத்தை நான் நகை பணம் போன்ற பொருட்களை கையில் சேர்த்துக் கொண்டு நடாத்த சிறிது காலம் பொறுத்திருந்தேன். இறந்தவரின் வீட்டிற்கு நான் மாறிச் சென்ற போது காதலனுக்கு அறிவிக்கவில்லை. இறந்தவர் வீட்டில் வசித்து வந்த போது ஒரு நாள் ‘துவஷம்’ பண்டிகைக்கு நான் எனது சொந்த வீட்டிற்கு திரும்பிச் சென்றுள்ளேன். அந்த நேரம் தேவதாஸை நான் நேரில் காணவில்லையாயினும் எனது இதயத்திலிருந்து மறக்கவில்லை. மனதில் அவருக்கு நீங்காத இடம் கொடுத்திருந்தேன். சிவஞான திருவும் நானும் நட்புறவு கொண்ட பின்னர் காலஞ் சென்றவரை எனது தாயாருக்குத் தெரியும். நான் காலஞ் சென்றவர் வீட்டில் வசித்த காலத்தில் சிவஞான திருவுக்கு எனது காதல் உறவுகள் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

ஒருவருக்கும் தெரியாது அடைக்கலமாக நான் காலஞ் சென்றவர் வீட்டில விடப்பட்டிருந்த சமயம் மயில்வாகனம் அங்கு வந்து என்னைச் சந்திப்பதை எனது அம்மா விரும்பவில்லை. ஒரு தடவை இதை நேரில் மயில்வாகனத்திடம் தெரிவித்துப் பேச்சுக் கொடுத்தார். இறந்தவர் மதுபானம் அருந்தும் வழக்க முடையவர் என மயில்வாகனம் எனக்கு கூறியுள்ளார். கொலையுண்ட தினம் இறந்தவரிடம் மதுபான வாடை மணம் எனக்கு வீசியது. இவர் மதுபானம் குடிப்பதை நான் நேரில் காணவில்லை.

மாஜிஸ்திரேட் ஒரு கட்டத்தில சாட்சியிடம் கொலைக் குற்றச்சாட்டுக்கள் மிகப் பாரதூரமானவை எனவே சாட்சியமளிக்கையில் உமது கெட்டித்தனத்தைக்காண்பிக்காது உண்மையாக சம்பவத்தில் நேரில் கண்டவற்றைநினைவுபடுத்தி கூறுமாறு தெரிவித்தார்,

தொல்புரத்தைச் சேர்ந்த புனிதவதி கைம்பெண் சுப்பிரமணியம் வயது 45 என்னும் பெண்மணியைக் கொலைசெய்ததாக அறுவருக்கு எதிராக குற்றம் சுமத்தி சங்கானைப் பொலிசார் இவ்வழக்கைத்தொடர்ந்துள்ளனர்.

மேல்விசாரணையை ஒத்திவைத்துள்ள மாஜிஸ்திரேட் எதிரிகளைத் தொடர்ந்து றிமாண்டில் வைக்கும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

எதிரிகள் சார்பில் புறக்டர் திரு. கே. குணரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## இயற்கை மரணமென தீர்ப்பு

சங்கானை, ஞாயிறு

பனிப்புலத்தைச் சேர்ந்த கதிரவேலு துரைசிங்கம் (வயது 50) மரணம் சம்பந்தமாக வெளியூரில் இருக்கும் உறவினர்களும் கலந்து கொள்ளவேண்டும் என எழுந்த வாக்குவாதம் காரணமாக உறவினர் ஒருவர் பொலிசிற்குக் கொடுத்த தகவலைத் தொடர்ந்து மரணச்சடங்கு நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை சங்கானை பொலிசார் தலையிடவேண்டி ஏற்பட்டது.

காலஞ்சென்றவருக்கு இடையிடையே வலி வருவதுண்டென்றும், சம்பவம் நடைபெற்றதினம் வெள்ளத்தில் சென்றுகொண்டிருக்கையில் திடீரென வலி ஏற்பட்டு வெள்ளத்தில் விழுந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. டாக்டர் ஞானப்பிரகாசம் பிரேத பரிசோதனை நடத்தினார். மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## மாணவர்இலக்கிய மன்ற விழா

புலோலி, ஞாயிறு

ஹாட்லிக் கல்லூரி க.பொ. த. வகுப்பு மாணவர் இலக்கிய மன்றத்தினரின் ஆண்டிறுதிவிழாவும், சிற்றுண்டி விருந்தும் கல்லூரி மண்டபத்தில் மன்றத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர். செயலாளர் செல்வன் சு. ஆனந்த கணேசன் நன்றியுரை கூறினர்.

## “பட்டதாரிகளுக்கே வேலையில்லாதபோது பலகலைக்கழகத்தை பற்றி அக்கறை ஏன்?”

யாழ்ப்பாணம், திங்கள்

“பல்கலைக் கழகத்தின் படிப்பை முடித்துவிட்டு வேலையில்லாதிருக்கும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்னையைத்தீர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கவில்லையானால் காலப் போக்கில் இது ஒரு தீராத பிரச்னையாகவே ஆகிவிடும். வேலையில்லாதிருக்கும் பட்டதாரிகளின் சேவையையும், ஆற்றலையும் நாட்டு முன்னேற்றத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் இதுவரை பயன்படுத்தாத அரசாங்கம் மேலும், மேலும் பல்கலைக்கழகங்களின் அபிவிருத்தியில் அக்கறை காட்டுவது ஏன்?”

நல்லூர் தெற்கு வாலிபர் சங்கக்கூட்டத்தில் தலைமை வகித்துப்பேசிய இலங்கை கலைப் பட்டதாரிகள் சங்கக் காரியதரிசி திரு. எஸ். துரைராசா மேற் கண்டவாறு கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

எமது பிரச்னை சம்பந்தமாக எமது தூதுக்குழு ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம் திருச்செல்வம், [illegible] தமிழரசுக்கட்சித் தலைவர்களையும் தமிழ் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தையும் கண்டு எமது நிலைமையை எடுத்துக் கூறியபோது எல்லோரும் உடன் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்தார்கள். இவ்விடயமாக இன்னும் ஒன்றுமே நடக்கவில்லை.

இனிமேல் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறும் பட்டதாரிகளுக்குஎமது நிலைதான் ஏற்படும். காலப் போக்கில் எமது பிரச்னையும், தொகையும் அதிக[illegible] அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்குமோ தெரியவில்லை.

[வி. நி]

சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை

# தரக்குறைப்புக்கு கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

குருநகர் சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலைத் தரம் குறைப்பை எதிர்த்து நேற்று மேற்படி பாடசாலை மண்டபத்தில் வண. பிதா பெனட் கொன்ஸ்டன்டைன் தலைமையில் பொதுமக்கள் கூட்டமொன்று நடைபெற்றது.

இந்தப் பாடசாலை சுமார் 96 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் இப்பாடசாலையின் சேவையால் அநேக பிள்ளைகள் பல்கலைக்கழகம் வரை மேற்கல்விக்குப் போகமுடிந்தது என்றும் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஜி. ஸி. ஈ. வரை வகுப்புகள் நடைபெற்றுவரும் இப்பாடசாலையைத் தரம் குறைத்து 7ம் வகுப்பு வரை வகுப்புகள் நடத்த முயற்சிகள் நடைபெறுவது நிறுத்தப்பட்டு இப்பாடசாலையின் தரம் முன்னிருந்தபடியே தொடர்ந்திருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தின் நகல்கள் யாழ்ப்பாணம் தற்காலிக வித்தியாதிபதிக்கும், யாழ்ப்பாண எம். பி.க்கும், கல்வி இலாகாவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

## இந்துசமய அனுஷ்டானங்கள் அடங்கிய ஒரே பஞ்சாங்கம்

### வெளியிடுவதற்கு கருத்தரங்கில் தீர்மானம்

அளவெட்டி, ஞாயிறு

இலங்கை வாழ் இந்து சமயிகள் மத்தியில் எழுந்துள்ள முக்கிய பிரச்னைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள இந்துமன்றங்கள் முன்பே நடவடிக்கை எடுக்காத காரணத்தால் இந்துக்களின் விரத அனுஷ்டானங்கள் சிதைவுற ஏதுவாகின்றது என சைவ அனுஷ்டான சபைத்தலைவர் திரு. த. சிவலிங்கம் கீரிமலையில் நடைபெற்ற கருத்தரங்கு மகாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், “குருகுலம் வாழ்ந்தால்தான் சைவம் வளரும். எனவே நாட்டின் பல பகுதிகளிலும் குருகுலப்பாடசாலைகளை அமைத்து குருகுலம் மிளிர இந்துக்களாகிய நமது பணி உதவுவதாக அமைய வேண்டும்” என அவர் சொன்னார்.

திரு. பாலசுந்தரக் குருக்கள் பேசுகையில் “நாம் ஆருத்ரா தரிசனத்தைக் கைக்கொள்ளுவது சம்பந்தமாக ஆதாரங்கள் காட்டிப் பேசினர்.

திரு. து. சுந்தரமூர்த்தி ஐயரும் பேசினர்.

ஆகமத்தையும் சாஸ்திரத்தையும் அனுசரித்து இம்முறை ஆருத்திராதரிசனத்தை இம்மாதம் 14-ம் திகதி அனுஷ்டிப்பது உகந்தது. ஆனாலும இதனை எல்லோரும் ஒருமுகமாகக் கொள்வதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ள அவகாசம் போதவில்லை. வருங்காலத்தில் இப்படியான சர்ச்சைகளுக்கு இடமளிக்காதவகையில் ஆகமத்துக்கு விரோதமில்லாதபடி சாஸ்திரத்தை அனுசரித்து பஞ்சாங்க கர்த்தாக்களையும் ஆகம அறிஞர்களையும் ஒன்று சேர்த்து ஆராய்ச்சி மகாநாடொன்று கூட்டி இந்து சமயத்தவரின் விரத அனுஷ்டானங்களையும் மற்றும் முக்கிய விஷயங்களையும் கொண்ட ஒரு பஞ்சாங்கம் வெளியிடப்படும்” எனவும் முன் நடத்தியதுபோல் பசு ஊர்வலமொன்றை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அகில இலங்கை சைவ அனுஷ்டான சபையும், அகில இலங்கை தர்மகர்த்தாக்கள் சபையும், அகில இலங்கை வேதாகம சபையும் இக்கருத்தரங்கை நடத்தின.

## நோயாளி மீது பலாத்காரம்

### ஆஸ்பத்திரி ஊழியர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற இருந்த இளம் பெண் ஒருவர் மீது பலாத்காரம் பிரயோகித்ததென்ற சந்தேகத்தின் பேரில் ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றிரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வார்ட் ஒன்றில் சிகிச்சைபெற அனுமதிக்கப்பட்டிருந்த 20 வயது இளம் பெண்ணொருவரை ஆஸ்பத்திரியின் ஒரு பிரிவில்கடமையாற்றும் ஒருவர் படம் பிடிக்க வருமாறு ‘எக்-ஸ்றே’ அறைக்கு அழைத்துச் சென்று, தகாத முறையில் நடந்ததாகவும், ஆஸ்பத்திரி ஓவசியர் ஒருவர் இவர்களைக் கண்டுபிடித்து பொலிஸில் ஒப்படைத்ததாகவும் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பகுதி பொலிஸ் சார்ஜன்ட் திரு. பி. நவரத்தினம இது சம்பந்தமாக விசாரணை நடத்தினர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

[ந. நி.]

## பிணையில் செல்ல அனுமதி

குரும்பசிட்டி, ஞாயிறு

அச்சுவேலி கதிரிப்பாய் என்னும் கிராமத்தைச் சேர்ந்த கந்தையா சின்னத்துரை, முத்தையா பத்மநாதன் ஆகிய இருவரும் தமது வீட்டில் இலங்கை எண்ணெய் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 720 அடி நீளமான டெலிபோன் தந்திக்கம்பிகளை வைத்திருக்கக்காணப்பட்டு காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜண்ட் எம். பி. வேலுவினல் கைது செய்யப்பட்டனர். இவ்விருவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதுமாஜிஸ்திரேட் சந்தேக நபர்களைத் தலா 200 ரூபா பிணையில் செல்லுமாறும் ஜனவரி 19ந் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு போட்டிகளிலும் நல்லூர் ருவின்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்
நல்லூர் அரசடி ருவின்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் அராலி சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான 'ஏ' பிரிவு, 'பி' பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகள் இரண்டிலும் ருவின்ஸ் கழகம் அராலிக் கோஷ்டியை வெற்றியீட்டியது.

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிகளில் முதலில் 'பி' பிரிவு போட்டியே ஆரம்பமானது. ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் அருமையான 'பாசிங்' மூலம் எதிர் கோஷ்டியைத் திணறடித்த ருவின்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்களான மூர்த்தி, நாகராசா, யோகநாதன், உருத்திரநாதன், குருநாதன் கோல்காப்பு வீரர் என். சிவஞானம ஆகியோரின் ஆட்டம் ரசிக்கக் கூடியது. எதிர் கோஷ்டியின் பின்னணி வீரர்களின் அதிர் அடிகள் அருமையானது. இப் போட்டி முடிவில் ருவின்ஸ் கோஷ்டிஒரு கோலால் அராலியை வென்றது.

இப் போட்டியை அடுத்து நடைபெற்ற 'ஏ' பிரிவுப் போட்டியில் இரு கோஷ்டியினருமே நன்ருக ஆடினர். ருவின்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்களான சந்திரபாலன், இராசையா ஆகியோரின் ஆட்டம் புரட்சிகரமாகவே காணப்பட்டது. இவர்களின் உதவியுடன் மாசிலாமணி என்னும் வீரர் இரு கோல்களை அருமையாக விளாசினர். இதையடுத்து அராலி முன்னணி வீரர் ஒரு கோல் போட்டார். இக் கட்டங்களில் நல்லூர் கோஷ்டியின் சந்திரபோஸ், செல்வச் சந்திரன், யோகேஸ், எஸ். சிவப்பிரகாசம் ஆகியோர் நன்ருக ஆடினர். இப்போட்டி முடிவில் ருவின்ஸ் கோஷ்டி 2—1 கோல்களால் அராலியை வென்றது

இப்போட்டிகளுக்கு திரு. கோபால் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

]வி.நி.]

## வயோதிபரை கார் மோதியது

குரும்பசிட்டி, ஞாயிறு
காங்கேசன்துறை பிரதான வீதியில் வைத்து வெள்ளிக்கிழமை பிற்பகல் சின்னத்தம்பி என்ற வயோதிபர் காரொன்றினுல் மோதப்பட்டுப் பலத்த காயமடைந்த நிலையில் காங்கேசன்துறை அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது இவர் சுயநினைவு இழந்த நிலையில் இருப்பதாகத் தெரிகிறது.

இவ்விபத்து சம்பந்தமாக மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த எஸ். பரமலிங்கம் என்ற கார்ச் சாரதியைக் கைதுசெய்திருந்த காங்கேசன்துறைப் பொலிஸார் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் ஆஜர்செய்தனர் மாஜிஸ்திரேட் கார்ச் சாரதியை ஆயிரம் ரூபா பிணை செலுத்திச் செல்லுமாறு உத்தரவிட்டு இம்மாதம் 6ந் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் கட்டளையிட்டார். இவ்விபத்தில் காயமடைந்துள்ள நபர் சிறிது சித்தசுவாதீனமற்றவர் எனவும் அனுதரவான நிலையில் வசித்துவருபவர் எனவும் தெரிகிறது.

## கடன்பெற வழிசெய்யவும்

### யாழ்.எம்.பி.யிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்
''பாஷையூர் கடற்ருெழிலாளர் மீன்பிடி வள்ளங்கள் விடும் துறை சேறு நிறைந்து சாலைகள் குவிந்து வள்ளங்கள் விடமுடியாத அளவுக்கு சீர் குலைந்து விட்டது. வாழ்க்கைச் செலவுகளும், மீன்பிடி உபகரணங்களும் விலையேறியுள்ள இந்த இக்கட்டான நேரத்தில் மகஜள் வங்கி மூலமோ அல்லது கடற்ருெழில் கூட்டுஸ்தாபன மூலமோ கடன் பெறவாவது வழிவகை செய்து தரவேண்டும்.''

யாழ்ப்பாண எம்.பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய பாஷையூர் கடற்ருெழிலாளர் கூட்டுறவு சங்கத் தூதுக்குழு மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டது. இக்குழு திரு. பொன்னம்பலத்திடம் மேலும் தெரிவித்ததாவது: புதிய கல்வித் திட்டத்தினுல் சென். அன்ரனீஸ் தமிழ் கலவன் பாடசாலையின் உயர் வகுப்புகள் நீக்கப்படுவதைத் தடைசெய்ய வேண்டும்.

(வி.நி.)

## ஒரு பகுதி இடம்மாறும்

கொம்பனித்தெரு, ஞாயிறு
பரீட்சைப்பகுதியின் ஒரு பகுதி டிசம்பர்மாத இறுதிக்குள் கொழும்புப்பகுதி எல்லைக்குள் இடம்மாற இருப்பதாக அறியப்படுகின்றது. இடநெருக்கடியே இதற்குக்காரணமாம்.

## சிங்களம் தெரியாதவர் கஷ்டம்

கொம்பனித்தெரு, ஞாயிறு
கொழும்பு நகரிலுள்ள இ. போ. ச. பஸ்களில் தனிச் சிங்களமே காணப்படுவதால் இங்கு சிங்களம் தெரியாத பிரயாணிகள் பெரிதும் சங்கடப்படுகின்றனர். இது பற்றி பலதடவைகள் புகார் செய்யப்பட்டும் இதுவரை இக்குறை கவனிக்கப்படவில்லை.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

### திங்கள் 4-12-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைஇசை, 8-00 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 சதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடு பாப்பா, 5-45 பாங்கு.

இரவு 6-15 பாட்டு — பஜனேஸ்வரி தில்லைநாதன், 6-45 கிராமசஞ்சிகை. 7-15 பாவளம், 7-30 குங்குமம். 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், 9-30 விவாதம் — அமெரிக்க குடியரசு ஜனநாயக கட்சிகளின் கொள்கைகள், 10-00நேயர் விருப்பம்.

## வேகத்துக்கு கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் மோட்டார் வாகனங்களை ஒரு குறிப்பிட்ட வேகத்தில் செலுத்தி செல்லவேண்டிய நடபடிக்கைகளை மாநகரசபை விசேஷ ஆணையாளர்கள் எடுக்க விருப்பதாகத் தெரிகின்றது.

மாநகர எல்லைக்குள் தொடர்ந்து வாகனங்களால் விபத்துக்கள் நடப்பதாலேயே இந்த நடபடிக்கையை ஆணையாளர்கள் எடுக்கவிருக்கிருர்சளாம்.

(ந. நி)

## சங்காபிஷேகம்

அளவெட்டி, ஞாயிறு
கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி கோவிலில் இம்மாதம் 11ந் திகதி நவோத்ரசகஸ்ர மகா சங்காபிஷேகமும், அதையடுத்து பஞ்சமுகார்ச்சனையும் இரவு ஸ்சேவ திருவிழாவும் நடைபெறவிருக்கிறது.

## 15 குடும்பங்கள் பாதிப்பு

ஊர்காவற்றுறை, ஞாயிறு
சில தினங்களாக பெய்த மழை காரணமாக வேலணையைச்சேர்ந்த சரவணைமேற்கு கிராமத்தின் ஒரு பகுதியில் பெரு வெள்ளம் ஏற்பட்டதினுல் சமார் 15 குடும்பங்கள் சின்னமடு கோவிலில் தங்கியுள்ளனர். வீதிகளை வெட்டி தண்ணீரை பாய்ச்சும் முயற்சியில் இப் பகுதி மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

## குற்றத்தை ஒப்புக்கொண்டார்

குரும்பசிட்டி, ஞாயிறு
கொழும்பு - காங்கேயன்துறை புகையிரதத்தில் க்கட் இல்லாமல் பிரயாணம் செய்ததாக திருமதி. மார்கணி வர்ணகுலசூரியா என்ற பெண்ணை புகையிரத பாதுகாவல் அதிகாரி மல்லாகம் நீதிபதி திரு. ரி. எஸ். நொத்தசிங்க முன்னிலையில் ஆஜர் செய்தார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதிபதி ரூபா 26 அபராதஞ் செலுத்த வேண்டும் அல்லது ஒரு வாரம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும்என உத்தரவிட்டு தீர்ப்பழித்தார்.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், திங்கள்
சுவாமி சாயி பாபாவும், மனேதத்துவ சக்தியும் என்னும் பொருள் பற்றி டாக்டர் ரி. அருளம்பலம் யாழ். சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகத்தில் இம் மாதம் 14-ம் திகதி ஒரு விரிவுரையாற்றவுள்ளார்.

இவ்விரிவுரையில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் அனுமதிபெற்றே செல்ல வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

[வி. நி.]

## தம்பிரான் சுவாமிகள் இந்தியா செல்கிருர்

கோப்பாய், ஞாயிறு
நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன அதிபர் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சமயப்பிரசாரம் செய்யும் பொருட்டு அடுத்துவரும் ஜனவரி மாத முற்பகுதியில் பாரதம் செல்லவிருக்கிருர். இவர் அங்கே 6 மாதகாலம் தங்கி சமயசேவை செய்வார்.

# ''தனிப்பட்ட முறையிலாவது கடன் வழங்குக''

அளவெட்டி, ஞாயிறு
இப்பகுதி விவசாயிகளின் பயிர் அழிவுக்குக் காரணமான வெள்ள அபாயத்தை தடுக்க மாருகலட்டி வெள்ள வாய்க்கால் 'மேற்குப்புற வரம்பை வலி—வடக்கு காரியதிகாரி உதவியுடன் சிரமதான மூலம் சீரமைப்பதெனவும், உப உணவுப் பொருட்களுக்குத் தேவையான செயற்கை உர வகைகளை வெண்காயம், மிளகாய் போன்றபயிர்கள் செய்யும் விவசாயிகளுக்கு அரசாங்க உத்தரவாத விலையில் கிடைக்க ஆதன செய்யவேண்டுமெனவும் பழை. வீமன்காமம் பயிர்ச் செய்கைக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பழை—வீமன்காமம் கிராமசேவைளார் காரியாலயத்தில் திரு. சீ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில தற்போது செயல்படும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கடன் வசதி கொடுப்பதில்லையென அரசாங்கக் கூட்டுறவுப் பகுதி தீர்மானித்துள்ளதால் உப உணவு உற்பத்தியில் ஈடுபடும் கமக்காரர்களுக்கு விவசாயப்பகுதி நேரடியாகவாவது கடன் பெற வசதி செய்து கொடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

## விபத்தை பார்வையிடச்சென்றவர்கள் விபத்தில் சிக்கினர்

குரும்பசிட்டி, ஞாயிறு
இ. போ. ச. பஸ் ஒன்றுடன் விபத்துக்குள்ளான லொறியின் நிலையைப் பார்வையிட்டுத் தெரிந்துகொள்ளச் சென்ற கோஷ்டி ஒன்று விபத்தில் சிக்கி மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவம் பளைக்கு அருகாமையிலுள்ள முகமாலைக் கிராமத்தில் நடைபெற்றுள்ளது. மயிலிட்டி தெற்கு கட்டுவனைச் சேர்ந்த லொறி பளையில் பஸ் ஒன்றுடன் விபத்துக்குள்ளாகியதையடுத்து மயிலிட்டி கிராமசபைத்தலைவர் திரு. சி. அருணசலம் உட்பட நால்வர் காரொன்றில் பளை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததாகவும், கண்டி-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் முகமாலைக் கிராமத்தில் வைத்து பனைமரம் ஒன்று இவர்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்த கார்மீது முறிந்து வீழ்ந்து காரைப்பலத்த சேதத்திற்குள்ளாக்கியதாகவும், தெய்வாதீனமாககாரில் இருந்த எவரும் காயமடையவில்லைஎனவும் தெரிகிறது.

## இலவச கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாணம் முதலாம் வட்டாரத்தில் வாழும் ஏழை மக்கள் தமது கண் சம்பந்தமான வியாதிகளை இன்று இலவசமாகப் பரிசோதிக்கலாம். கண் வைத்திய நிபுணர் டாக்டர் என். ஆனந்தராஜன் இன்று பிற்பகல் 2 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் மெயின்வீதி-மூன்ரும் குறுக்கு வீதிச்சந்தியிலுள்ள ஒரு கட்டடத்தில் இவ்விலவச சேவையை வழங்குவாரெனவும் இவ்வித சேவை யாழ். நகரின் மற்றும் வட்டாரங்களுக்கும் ஒவ்வொருமாதமும் நாலாம் திகதியிலும் கிடைக்குமெனவும் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். [நி[

## வல்வை பட்டினசபை

### வரவு-செலவுத்திட்டம் நிறைவேறியது

புலோலி, ஞாயிறு
வல்வெட்டித்துறைப் பட்டினசபை மாதாந்த கூட்டத்தில் 168-ம் ஆண்டிற்கான வரவு—செலவுத்திட்டம் எதுவித திருத்தங்களுமின்றி நிறைவேற்றப்பட்டது. திட்டம் தமிழிலும் ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டு கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வடமராட்சி சுகாதார அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் ப. ஜீவனுயகம் வல்லை கோர பஸ் விபத்தில் அகால மரணமடைந்ததையிட்டு இரண்டுநிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

1967-ம் ஆண்டின் வரவு-செலவுத்திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆக்கவேலைகள்யாவும் திருப்திகரமாகப் பூர்த்திசெய்யப் பட்டுள்ளதாகத் தலைவர் திரு. இரத்தினவடிவேல் கூறினுர்.

புதிய வரவு-செலவுத்திட்டத்தில் பட்டினசபைக்கென ஒரு காரியாலயம் இல்லாத குறையை நிவர்த்திக்குமுகமாக ஒரு காரியாலயம் அமைப்பதற்கு அடையாளமான்யமாக ரூபா 4,000/- ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் வரவு-செலவுத்திட்டத்தை ஆங்கிலத்திலும், தமிழிலும் தயாரித்த செயலாளர் திரு. மு. தாமோதரம்பிள்ளையையும் ஒத்துழைப்பளித்த இதர ஊழியர்கள், மற்றும் அங்கத்தவர்களையும் பாராட்டுவதாகவும் தலைவர் கூறினுர்.

மலசுத்தித்தொழிலாளர்களுக்கும், இதர ஊழியர்களுக்கும் உடனடியாக மழை அங்கிகள் வழங்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## தமிழ் தெரியாத தாதிகள்

புலோலி, ஞாயிறு
மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு தற்பொழுது நியமிக்கப்பட்டுள்ள ஆண் தாதிகள் இருவருக்குத்தமிழ் தெரியாது. இதனுல் அங்கு சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் கஷ்டமடைய வேண்டியிருப்பதாகப் புகார் கூறப்படுகிறது.

தமிழே தெரியாத இத் தாதிகள் சிங்களத்தில் பேசுவது நோயாளருக்குப்புரியவில்லையாம். நோயாளர் பேசுவது இத்தாதிமாருக்கு புரியவில்லையாம். இந்த நிலையில் நோயாளர்கள் நலன்களைத் தமிழ் தெரியாத இந்த இரு ஆண் தாதிகள் கவனிப்பது எப்படி என்று சிகிச்சைபெற்றுவரும் நோயாளர்கள் புகார் கூறுகிருர்கள்,

## மகா கும்பாபிஷேகம்

தெல்லிப்பளை, ஞாயிறு
திருக்குரும்பசிட்டி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம்எதிர்வரும்6-ம் திகதி நடைபெறவிருக்கிறது. அன்று காலை 7 மணிக்கும் 9 மணிக்குமிடையில் அம்பாளுக்கும் மற்றும் விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரன், வைரவர், சண்டேஸ்வரி முதலானபரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிசேஷகம் செய்யப்படும். இரவு உற்சவம் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடும் பஸ்ஸில் ஏறமுயன்றோரம் கால் முறிந்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் ஏறமுயன்ற ஒருவர் சில்லுக்குள் அகப்பட்டு கால் துண்டிக்கப்பட்டார். இப்பரிதாப சம்பவம் நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கருகாமையில் நடைபெற்றது.

குணசிங்கம் என்ற [37 வயது] நபர் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து தாவடிக்கு ஊடாக மானிப்பாய்க்குச் செல்லும் இ. போ. ச. பஸ். நிலையத்திலிருந்து புறப்பட்டு ரோட்டில் ஏறுகையில் காயங்களுக்குள்ளானவர் பஸ்ஸில் ஏற முயன்றபோது தவறிவீழ்ந்ததால், சில்லுக்குள் அகப்பட்டதாக பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ந.நி.)

# பிரசவ விடுதியும் பொலிஸ்நிலையமும்

## அச்சுவேலியில் நிறுவப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு அச்சுவேலியில் 1 லட்சம் ரூபா செலவில் பிரசவவிடுதி ஒன்றும், புதிய பொலிஸ் நிலையமொன்றும் அடுத்த வருட முற்பகுதியில் அமைக்கப்படும். இது பற்றிய தீர்க்கமான முடிவுகள் யாழ்ப்பாணம் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை பேசுகையில், அச்சுவேலியில் புதிய பொலிஸ் நிலையமொன்றை அமைக்க பொலிஸ் இலாகா சம்மதம் அளித்துள்ளபோதிலும் போதிய இடவசதி இல்லையென்ற காரணம் காட்டி அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையெனச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து, அச்சுவேலியில் ஓர் இடத்தைப் பொலிஸ் நிலையம் அமைக்கத் தெரிவதற்கான பொறுப்பு காரியாதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

## வெங்காய உற்பத்தியாளருக்கு உதவி கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு வெங்காயத்தின் உத்தரவாத விலை விரைவில் கூட்டப்படலாம். இது சம்பந்தமாக மந்திரி சபை கூடி ஆலோசனை செய்யுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாணய மதிப்புக்குறைக்கப்பட்டதன் பின் விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதால் வெங்காயத்தின் உத்தரவாத விலையைக் கூட்டவேண்டுமென கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளையும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கமும் பிரதமரிடம் கேட்டதைத் தொடர்ந்தே இது பற்றி மந்திரி சபையில் கூடி நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் தெரிவித்தார். (ந.நி.)

# 'யாழ்ப்பாண ஆசிரியர் சிதறடிக்கப்படுகிறார்கள்'

வட்டுக்கோட்டை, சனி 'பாடசாலைக் கல்வி, நிர்வாகம், உத்தியோகஸ்தர் நிலை நாளுக்கு நாள் சீரழிந்து வருகின்றது. ஆசிரியர் எல்லாவகையிலும் விசேஷமாக யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் ஆசிரியர்கள் சிதறடிக்கப்படுகிறார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர் நிலை, கல்வித்தரம் திட்டமிட்ட செயல்களால் சீரழிந்து அவலப்படுகுழியில் தள்ளப்படுகின்றார்கள். எல்லாவகையிலும் முன்னேற்றமாயிருந்த தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி கீழான நிலைக்குத்தள்ளப்படுகின்றது. யாழ்ப்பாணம் கல்வித்துறையில் முன்னேறி வந்தது கல்வி அமைச்சருக்குப் பிடிக்கவில்லைப்போலத் தோன்றுகிறது.'

இவ்வாறு வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தலைவர் வலிகாமம் மேற்குத் தமிழ் ஆசிரியர் சங்கச் சார்பில் வட்டுக்கோட்டை தொகுதி கல்விச்சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கியசுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு, கந்தசாமி பேசுகையில், எமது தொகுதிக்கு ஒரு கல்விச் சபையிருப்பது எல்லா வகையிலும் பல காரியங்களைச் சாதிக்கத்தக்க வகையில் அமையும் என்றும் கல்வியைச் சீரழிக்கும் திட்டங்களைத் தடுத்து நிறுத்த முடியுமென்றும் கூறினார். தற்போது ஏற்பட்டிருக்கின்ற இரண்டு அலுவல்களைப் பெற்றோரின் நலன் கருதியும் பிள்ளைகளின் நலன் கருதியும் தடுத்து நிறுத்த கல்வித்துறையில் அக்கறைகொண்ட எல்லோரும் முன்வரவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

'பாடசாலைப் புனரமைப்பு என்ற போர்வையில் பாடசாலைகள் சிதறடிக்கப்பட்டு மாணவர் கல்வி கற்பதற்கே திண்டாடும் நிலையைப் பல பெற்றோர்கள் அறியாதிருக்கின்றார்கள். இதனாலேற்படும் விளைவு பிள்ளைகளைக் கல்வியறிவற்ற மூடர்களாக்குவதேயாகும். இதனைத் தடுத்து நிறுத்தவேண்டும். ஆசிரியர் இடமாற்றம் ஆசிரிய உலகில் ஒரு பெருந்தலையிடியாயமைந்துள்ளது. கண்ட கண்டபடி திட்டமற்ற இடமாற்றத்தால் ஆசிரியர் நைந்து கண்ணீர் வடிக்கவேண்டிய அவலநிலையிலுள்ளனர். ஆசிரியர் கவலையின்றிக் கலங்கா உள்ளத்துடன் கடமையாற்றினால் தான் கல்வியும் சிறப்படையும் பயனுள்ள கல்வியாகவும் அமையும். எனவே இந்தவித முறைகேடான இடமாற்றங்களை நிறுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் கூறினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பெருமளவினலான ஆசிரியர் இடமாற்றத்தைத் தடுத்து நிறுத்தக் கோரும் தீர்மானம் கல்வி அமைச்சர், கவர்னர் ஜெனரல், கல்விமா அதிகாரி, வடமாநில கல்வியதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனச் சபை தீர்மானித்தது.

மேற்படி கல்விச்சபையின் தலைவராக திரு. சு. கந்தசாமி தெரிவுசெய்யப்பட்டார். பதினைந்து பேர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது.

## கூட்டுறவு பேரங்காடி நவீனசந்தையில் இடம் பெறலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு புதிதாக அமைக்கப்படும் யாழ்ப்பாண சந்தையின் ஒரு பகுதியில் கூட்டுறவு பேரங்காடி ஒன்றை நிறுவ கூட்டுறவாளர் முயற்சிசெய்கின்றனர் என்று அறியப்படுகிறது. இதற்கான முன்னேற்பாடுகளை செய்வதற்குவட பகுதிகூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த பிரமுகர்கள் யாழ்ப்பாண மாநகர சபையிடம் அனுமதிகோரமுயற்சி செய்வதாகவும் தெரியவருகிறது. இவ்வாறு கூட்டுறவுப்பேரங்காடி யாழ்ப்பாணத்தில் அமையுமானால் அதுவே இலங்கையில் முதல்முதல் அமைக்கப்பட்டகூட்டுறவுப் பேரங்காடியாகும். [நி]

## தொலைபேசிச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் 120 தந்திக் கம்பிகளைக் கொண்ட 'கேபிள்' ஒன்று அரியாலைக்கு அருகாமையில் நேற்றிரவு கோடரியால் துண்டிக்கப்பட்ட நிலையிலிருந்ததாகவும் கூறப்படுகிறது நிலத்துக்கு அடியில் புதைக்கப்பட்டிருக்கும் இந்த'கேபிளை' வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்களே வெட்டியிருக்கலாமெனவும் தபால் இலாகாவினர் சந்தேகிப்பதாகத் தெரிகின்றது.

வெளியிடத்தொலைபேசி சேவை மாத்திரமன்றி உள்ளூர்ச் சேவையிலும் நேற்றிரவு முதல் பல இடங்களில் சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாகத் தபால் இலாகா நாசவேலைகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு பகிரங்க எச்சரிக்கையொன்றையும் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் தந்திப் பகுதி தொழில் நுட்ப வல்லுனர்களின் உதவியுடன் தற்காலிக ஊழியர்களை நியமித்து நிலைமையைச் சீராக்கத் தபால் இலாகா முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. (ந.நி.)

## தேவை

இனிப்பு, ரொபி வகைகள் சைக்கிளில் கொண்டு சென்று யாழ். மாவட்டத்துள் விற்பனை செய்வதற்கு பிணைப் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும் சிலோன் கொன்பெக்சனறி வேக்ஸ் [Ceylon Confectionery Works], முத்துக்கிருஸ்ணர் ஒழுங்கை சுன்னாகம். 355

# 'மக்கள் நலனைக்கருதி வேலைக்குத் திரும்புக'

## தந்தி தொடர்பு ஊழியருக்கு மந்திரி அறிவிப்பு

கொழும்பு, சனி நாட்டின் நலனையும் மக்களின் நலனையும் உத்தேசித்து வேலைக்குத் திரும்பும்படி வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ள தந்தி தொடர்பு ஊழியர்களுக்கு தபால் தந்தி தொடர்பு இலாகா அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரமா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தந்தி தொடர்பு ஊழியர்களின் பிரதிநிதிகள் பிரதம மந்திரியை கடந்த மாதம் 25-ம் திகதி சந்தித்தபோது அவர்களின் 14 கோரிக்கைகளில் பத்து கோரிக்கைகள் வழங்கப்பட்டன, இதர கோரிக்கைகளும் கவனிக்கப்பட்டு வந்தன. ஆனால் 27-ம் திகதி அவர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கினார்கள். என்று மந்திரி கூறினார்.

மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரமா இன்று நடத்திய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் வேலைநிறுத்த நிலைமை பற்றி விளக்கினார்.

வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளவர்களின் நாட்டுப் பற்றற்ற செய்கையை மந்திரி கண்டித்தார்,

தந்தி தொடர்புகளில் பல இடங்களில் நாசவேலைகள் இடம்பெற்றிருப்பதாகவும் மந்திரி தெரிவித்தார்.

இதற்கிடையில் காலி, நீர்கொழும்பு, சிலாபம் ஆகிய இடங்களில் வேலைநிறுத்தங்களில் இறங்கியிருந்தவர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

# முளங்காவில் குளத்தில் ஆராய்ச்சி நடைபெறும்

## 14-ம்தேதிஇஸ்ரேல்நிபுணர்செல்வார்

பம்பலப்பிட்டி, ஞாயிறு சுமார் ஒரு மைல் நீளமும் அரைமைல் அகலமும் உள்ள பூநகரி முளங்காவில் குளத்தில் தண்ணீர் திடீரென வற்றும் அதிசயத்தை யிட்டு இஸ்ரவேல் நிபுணர்கள் இம்மாதம் 14-ம் திகதி ஆராயவிருக்கின்றனர்.

பல்வராயன் கட்டுக்குச் சமீபத்தில் உள்ள இக் குளத்தில் மழை பெய்து நீர் நிரம்பிய இரண்டு வாரகாலத்திற்குள் தண்ணீர் திடீரென்று வற்றிவிடும் அதிசயம் பல காலமாக புரியாத புதிராக இருந்து வருகிறது.

இஸ்ரவேலைச்சேர்ந்த தண்ணீர் நிபுணர் திரு. ஹென்றிக்கும், இலங்கை அரசாங்க புவியியல் நிபுணர் திரு. சிறிமன்னே, இலங்கை தண்ணீர் மூலவள சபை பொறி இயல் நிபுணர்திரு. எஸ். ஆறுமுகம் ஆகியோர் இம்மாதம் 14-ம் திகதி பூநகரிக்கு செல்கின்றனர்.

இவர்கள் இக்குளத்தின் அதிசயத்தை ஆராய்ந்த பின்னர் 15-ம்திகதி இவ் விஷயமாக வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவுடன் கலந்தாலோசிப்பர்.

அந்த ஆராய்ச்சியின் நோக்கம் பூநகரிப் பகுதியில் இந்தத் தண்ணீரைக் கொண்டு சுமார் 500 ஏக்கர் வயல் நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்வதாகும். இந்த ஆராய்ச்சிக்கு திரு. எஸ். ஆறுமுகம் பொறுப்பாக உள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்:...

[1-ம்பக்கத் தொடர்ச்சி[

சள் றுத்தல் 79சதம், தட்டைப்பயறு றுத்தல் 44சதம் பயறு றுத்தல் 52 சதம், கோப்பிக்கொட்டை (1-ம் தரம்) றுத்தல் 4-90 சதம், [2-ம் தரம்] றுத்தல் 3-90 சதம், சீனி றுத்தல் 74 1/2 சதம், மாவு றுத்தல் 35 1/2 சதம், சிந்தாமணி கடலை றுத்தல் 49 சதம், கொண்டல் கடலை றுத்தல் 49 சதம், கடலைப்பருப்பு றுத்தல் 58 சதம், உழுத்தம் பருப்பு (1-ம் தரம்) றுத்தல் 62சதம், (2-ம் தரம்)றுத்தல் 58 சதம், சர்க்கரை றுத்தல் 1.10 சதம், புளி றுத்தல் 85 சதம்.

மார்க்கட்டுகளிலுள்ள மற்றைய கடைகளில் இந்த விலைகளிலும் பார்க்க ஒவ்வொரு பொருள்களும் சுமகர் 15, 20 சதம் கூடவாகவே விற்கப்படுகின்றது மார்க்கட் கடைகள் சிலவற்றில் கறுப்புப் பச்சைஅரிகி கொத்து 1ரூபா 75 சதமாக விற்பனை செய்யப்படுகின்றது. [ந. நி]

புதுடில்லி, டிச. 2 இந்யா சிறு ஆயுத உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருப்பதோடு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய உயரி நிலையையடைந்துவிட்டதாக இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சுவர்ண்சிங் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் அரியகுட்டி

சுப்பிரமணியம் (நிர்வாக அதிபர் மஸ்கன்ஸ் ஸ்தாபனம்—அஸ்பெஸ்டோஸ் சிமெண்ட் இண்டஸ்றீஸ்), நாகராசா, (அதிபர் மஸ்கன்ஸ் ஸ்தாபனம் அஸ்பெஸ்டோஸ் சிமெண்ட் இன்டஸ்றீஸ்), ஆகியோரின் அருமைத் தந்தையும், சத்தியமூர்த்தி மகேந்திரன, நகுலேஸ்வரன், விஜயநாதன், லோகநாதன், திருமதி டாக்டர் டி. இரத்தினவேல், திருமதி எம். கணேசன், மல்லிகாதேவி, சரோஜாதேவி, சகுந்தலா, உமாதேவி, உஸ்ஸாதேவி, சுகன்ஜாதேவி ஆகியோரினது பேரனுமான பொன்னம்பலம் அரியகுட்டி காலமாகிவிட்டார்கள். உறவினர்களும், நண்பர்களும், இவ் அறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும், ஈமச்சடங்குகள் இன்று [திங்கட்கிழமை] காலை 10 மணிக்கு மானிப்பாய் பிப்பிரி மயானத்தில் நடைபெறும். — 'ஹலொக்ஸ்' வீதி, மானிப்பாய். 354

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org